புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது

சிவமயம்

விஜோதிஷு(1889) ஆவணிமீ உஅ ஆரம்பமானது

இந்துசாதனம்

(Supplement to the Hindu Organ)

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

பத்திரக்கிரயம்.

வருஷம் ஒன்றுக்கு

யாழ்ப்பாணப்பட்டினம்	ரூ	5 00
இங்கிலீசும் தமிழும்		9 00
இலங்கை இந்தியா	ரூ	8 00
இங்கிலீசும் தமிழும்		12 00
தொடுவாய்ப்பகுதி	ரூ	9 00
இங்கிலீசும் தமிழும்		13 00
தனிப்பிரதி	சதம்	05

முற்பண மனுப்பிஞலன்றிக் கவனிக்கப்படா.

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு

,, ஒரு கலம் ரூ. 10 00
,, அரைக் கலம் ரூ. 5 50
,, காற் கலம் ரூ. 4 00
,, ஒரு அங்குலம் ரூ. 1 00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற்பாதி.

காலம் நீடித்த விளம்பரக்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் சேரிற் கண்டேனும் எழுத்த மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்பட மாட்டா.

புத்தகம்—சக } யாழ்ப்பாணம்:— ஈசுவரஷு ஆவணிமீ உகூ (1937 செப்டம்பர் 13) திங்கட்கிழமை { இலக்கம்—சஉ

கொடை விதர்ப்பன் பெற்றதோர் கொம்பு

[வேலணையூர் கிழார் க. வேந்தனர்]

கொடை விதர்ப்பனின் கோக் குலம் விளக்கவோர் பூங்கொம்பனுள் பிறக்தாள். அவள் பிறக்த ஞான்றே பேழகுக் கடவுள் பூத்துப் வணங் கும் பெருகல முடையளாய்த் திகழ்ந் தாள். கொடை விதர்ப்பனும் தன் கோமகள் எழில் கண்டு கூறரும் உவ கை கொண்டான். கோமகளும், கலிவளர் மதியமன்ன கயனற வளர்ந் து, பெண்மை கலம் கனிந்து பெரிய ளாயினுள்.

நாற்குணங்களே நாற்படைகளாக வும், ஐம்புலன்களே அறகெறிகாட்டும் அறிவார் அமைச்சராகவும். கண்களே வேற்படையும் வாளுமாகவும், மெல் லடிச் சிலம்புகளே வென்றி முரசமாக வும் கொடுமுகமெனும் முழுமதிக் குடைகிழற்கிழ்ப் பொற்புங் கற்பும் நிறைந்த தன் பெண்மையைக் காவல் புரிந்து வந்தாள்.

இங்ஙனங் கொற்றம் புரிதரு கோக் குலமகளின் பொற்பமை அடிமலர்க ளின் மேல் வீழ்ந்து மோட்டிளங் கொங்கைகளே முடியச் சுமந்தேற மாட்டாதுன் இடையென்று வாய்விட் டுச் சிலம்புகள் விளம்புமாம். அவ ளின் கருங் கூந்தலின்கண் அணிந்த மாலைகளில் ஊற்றெடுக்கும் கொழுந் தேனைக் கொளவருமே அறுகாற் சிறுபறவைகள் தம் அஞ்சிறகுகளால் வீசுங் சிறகாற்றுக் காற்றுது இடை யானது தேய்த்து மெலிக்கு தவளும் தன்மையதெனில் அவ்வாய் தொடி யாள் தன் பொன்னடிகளைப் பூண்டு கிடக்து புலம்பி விளம்பும் பொற்சிலம் புகளுக் கென்ன மாற்றம் எடுத்தியம் புவள். காதலியூட்டுங் கடவுளும் தன் பொருவெளுகிலையைப் பொருந் தச் சார்த்திக் கணிதீட்டுமிடம் அப் பொன்னுள் நெற்றியெனிற் புகலுவ தென்?

இங்ஙனம் அழகினுக்கோர் அணி யாய் விளங்கும் அவ்வருந்தகையாள் மாட்டுக் காதலே பூட்டும் கடவுள் படைகற்பான் சென்றடைத்த பான் மை கண்டவேர் அன்னம் தானும் நடைகற்பான் கயந்து அவளே கண் ணிற்று. கண்ணிய வன்னம் எண் ணிய படியே நறைகமழ் குழலியிடம் நடைகற்று விட்டது; நவகையின் அழகுங் குணமும் அளியும் அருளும் அன்னதற்கு அடிமை கொண்டு விட் டன. எவ்வகையினும் யான் இவளி டம் கடை கற்றதற்காக ஓர் கன்றி செய்ய வேண்டுமென அன்னமெண் ணியது. இவளோ கோக்குடிக் குல மகளாதலின் குறையாத பெருநிதிக் குவையுளாள். யாதுமோர் குறையி லாள். எனவே, என்னும் பெறப்படு வதோர் பொருள் இவட்கின்று எனி னும் இப் பெண்ணருங்கலத்தினுள் இது பொழுது பெண்மை கலங் கனிந்த பெற்றியளாதலின் ஆண்மை கலங் கனிக்தவோர் அண்ணலே, இவட் கென்னற் பெறப்படுவதோர் பொருளாகுவன் எனத் திண்ணமுற்ற வன்னம் அங்கங்கையை நோக்கி ங்காய்! யான் உன்னிடம் நடைகற்ற கன்றிக்காக உனக்கேற்றவோர் கப்பி யைத் தேடி வருவனெனச் செப்பி கங்கையிடம் விடைபெற்று மீண்டது. மீண்டவன்னம் விளம்பிய மாற்றத் தில் தன் எண்ணத்தை பூறவைத் தொண்டோடியுற்றாள்.

மற்று மங்கையிடம் விடைபெற்று பறிக்கொண்ட வன்னம், மண்ணக மெங்குந் நிரித்து. மங்கைக்கேற்ற மன்னணைத் தேடிக் காணது வருந்தி மீற்றில் ஊழான் உக்தப்பட்டு நிலத் தில் புகழ்மிக்க கிடதாரபுக்கு ஆங் குள்ள பொற்றமரைப் பொய்கை யிற் போய்த் தன்னினத்துடன் பொருந்தி யிருந்தென்க.

இங்ஙன மன்னம் இருந்துழி அக் கிடதம் புகுக்கும் மன்னர் மன்ன னும் பூநாடிச் சேரலிபுக எண்ணி, வழிக்கொண்டு மலையைர் கண்க ளெல்லாம் மலிபொரு தன் மணித் தோளிற் கிடப்ப மானகர் நீங்கி வளர்புகுஞ் சேரலி புக்கான். புக்க மன்னணை இளவேனில் என்னும் இன்னியிர் கண்பன் வெற்றியை யுடைய காதற் கடவுள் வில்லெடுத் து வரவும் மலர்களில் வழிதரு மது நீரைத் தென்றலஞ் செல்வன் தெரு வெலாக் தெளித்து வரவுஞ் சென்று வரவேற்ருன். மன்னனும் மகிழ்ந்து அவ்வளர்பூஞ் சோலியின் நாப்பணுள மணியணியிசை வைகினன் வையி மன்னன் மருங்குள மணிநீர்ப்பெரய் கையில் தன் வரன் கிலையுடன் வதி யும் மடவன்னத்தைக் கண்டான். கண்டதும் பெரியதோர் காதற்கனி கூர்ந்து தன் மருங்கினின்ற மங்கை கல்லாசைப் பார்த்துப் பேதைமட வன்னக் தன்னைப் பிழையாமல் தம் அங்கை பற்றிக் கொடு வருவிரென ஆணை பெய்தான். அம் மங்கை கல் லாரும் மணிநீர்ப்பொய்கை சென்று தம் அங்கையால் அன்னத்தைப் பற் றிக் கொடு போந்து மன்னன் திரு முன்னர் வைத்தனர். வைத்தலும் அன்னம் மன்னணைக்கண்டஞ்சியது. பின் அடுமாற்றமில்லா அளிமொழி அம்மன்னன் அறையக் கேட்டுத் தன் தடுமாற்றம் நீர்ந்தது. அவ்வம யம் மன்னன் அன்னத்தை நோக்கி மடவன்னமே! நீ யஞ்சற்க. யான் உன்றன அணிநடையினும் வஞ்சி யணியார் மடநடையினும் எதி விஞ்சி யது எனக் காண்பான் பிடித்தேன் என விளம்பினன். மன்னன் விளம் பிய மாற்றத்தைக் கேட்ட அன்னம் அவனின் அறங்கிடக்த நெஞ்சையும் அருள் ஒழுகு கண்களையும் மறவ் கிடக்த நிணதோள் வலியையும் கண்டு எனக்கு நடைகற்பித்த கங் கைக் கேற்ற நம்பி இவனே யாவ னெனத் தன் சிக்தையிற் தேர்ந்த செப்பரும் உவகை கொண்டது. உடனே மன்னணை விளித்து மங் கையின் மாண்புகளை யெடுத்து வழுத் துவான் ரெடங்கியது. எங்ஙனம் எத்திசையெலாம் பரந்த வெண்கோற் றக் குடை கிழற்கிழ்த் தோன்றிச் செ லுத்தும் வேக்தனே என அன்னம் மன்னணை விளித்தது. மன்னனும் வியப்புடன் அன்னமென்ன மாற்ற மறையுமோ வென எண்ணி யன்னத் தைக் கோக்கினன். கோக்கியமன்ன னிற்க அன்னம் நுவன்ற மாற்ற மென்ன? உன் இசை முகந்த தோ ளிற் கிசைவாள், ஒரு தையலிருக் கிருளென்றது. இங்ஙன மன்ன மறைகளும் மன்னன வெறுத்தானோ? இல்லை. அவன் அன்னம் இன்னும் அவளையிட்டு என்ன இயம்புமென எதிர்பார்த்தான். அன்னமும் மன் னனின் உள்ளம் இருக்குக் தன்மை யை அறிந்து விட்டது. அறிந்த தும் தான் சொன்ன செய்தியைத் தொடர்த்து "அவள் வசையிலாள்" என வழுத்கியது. வழுத்கியதும் மன்னன் தன்னை மறந்து விட்டான். அன்னமறையும் மாற்றங்களிலேயே, தன் அளிதவழ் கெஞ்சை ஊறவைத் தான். ஆர்வமிகுதியால் அன்னத் தை விளித்து அவ் வருந்தகையாள் பெயர் என்ன, அறையவேண்டுமென வேண்டினன். வேண்டலும் அன் னம் விள்ளரும் உவகையுடன் 'தம யந்தி யென்றோதும் தையலாள்' என்றன. பெண்ணின் பெயர் கேட்டு மகிழ்ந்த மன்னன் அவள் பேரெழில் கேட்க வேண்டுமன்றே? அம்முறை யே அன்னமும் ஆய்ந்து, அவள் மென் றோளமையுங் நியென்றே ரணங்கு என்றது. இதனிப் புலவர் பெருமான் புகழேந்தியார்

'நிசைமுகந்த வெண்கவிகைத் தேர் வேந்தே யுன்ற
னிசைமுகந்த தோளுக் கிசைவாள்
—வசையில்
தமயந்தியென்றோதுக் தையலாள் மென்றோ
ளமையந்தி யென்றே ரணங்கு'

என உயிர் ஒவியம் எடுத்துப் போ தல் ஒண்டமிழ்ப் புலவர்க்கோர் விருக்

(தொடர்ச்சி 6 ம் பக்கம்)

திருப்புள்ளிருக்கு வேளூர்— —திருத்தாண்டகம்.

மின்னுருவை விண்ணகத்தி
லொன்றாய் மிக்கு
வீசுங்கா றன்னகத்தி லிரண்
டாய்ச் செந்தீத்
தன்னுருவின் மூன்றாய்த்தாழ்
புனலி னன்காய்த்
தரணிதலத் தஞ்சாகி யெஞ்சாத்
தஞ்ச
மன்னுருவை வான்பவளக் கொ
ழுந்தை முத்தை
வளரொளியை வயிரத்தை மா
சொன் றில்லாப்
பொன்னுருவைப் புள்ளிருக்கு
வேளூராளைப்
போற்றாதே யாற்றகாள் போக்
கினேனே.

கல்முனையின் கண்கொளாக் காட்சி

(வெள்ளவத்தை மு. இராமலிங்கம் எழுதுவது).

1935-ம் ஆண்டு டிசம்பர் மாசம் கத்தார் விடுமுறை காலத்தில் ஒரு சனிவாரத்தன்று காம் கல்முனைக்குப் போக நேர்ந்ததால் அன்று யாழ்ப்பா ணப் புகைரதத் தொடரும் திரிகோ ணமலைப் புகைரதத் தொடரும் மட் டக்களப்புப் புகைரதத் தொடரும் ஒருமித்துத்தொடுக்கப்பெற்றுக் கொ ழும்பு, கோட்டைப் புகைரத நிலையத் தில் நின்றன. காம் மட்டக்களப்புத் தொடரில் ஏறி உட்கார்ந்திருந்தோம். காம் அத்தொடரில் இருப்பதைக் கட்ட எம் கண்பர்கள் யாவரும் "இது மட்டக்களப்புத் தொடரல்லவோ நீங் கள் ஏன் முன்னுக்குச் சென்று யாழ்ப்பாணத் தொடரில் உட்காரக் கூடாது?" என வினவினர். "நீங் கள் எம்மை எமாற்றி மட்டக்களப் புக்கு அனுப்பப் பார்க்கிறீர்களா?" என காம் அவர்களைப் பரிகாசஞ் செய் தோம். அவர்களுக்கு காம் மட்டக் களப்புக்குப் போகிறோம் என்ற உண் மை விளங்காதபடியால காம் உட்காரர்ந் திருப்பது மட்டக்களப்புத் தொட ரென மீண்டும் வற்புறுத்த முயன்றார் கள். அவர்கள் எவ்வளவுக்கு வற் புறுத்த முயன்றார்களோ காமும் அவ் வளவுக்கு யாழ்ப்பாணத் தொடரிலே தான் காம் இருக்கிறோம் எனவும், யாழ்ப்பாணத்தான் காம் போகிறோ மெனவும் சாதித்தோம். ஒருவர் பக் கலிற் சென்ற புகைரதப் பாதுகாவல ரைக் கூவி யழைத்து அவர்மூலமாக காமிருப்பது மட்டக்களப்புத் தொட ரென மெய்ப்பித்தாராயினும் காம் எமது பிழையை ஒப்புக்கொண்டோ மல்லோம். புகைரதமும் வெளிக்கிளம் பும் நேரம் அணுகியது. காமும் மட் டக்களப்புக்குப் போகிறோமென எம் கண்பர்களுக்குக் கூறி அவர் களிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றோம்.

மறுநாட் பகல் பன்னிரண்டு மணி க்குமேல புகைரதம் மட்டக்களப்பை யடைந்தமையால் காம் மட்டக்களப்புப் பட்டினத்தைப் பாராது நேரே கல் முனைக்குச் சென்றோம். கல்முனை மட்டக்களப்புப் பட்டினத்தி லிருந்து 23 மைல் தூரம் தெற்கே யுள்ளது. அவ்விடையில் செல்லும்போது கல் லடிப்பாலம் எவரது மனதையும் கவராது விடாது. இலங்கையிலுள்ள பிகவும் நீளமான பாலம் இதுவே. இப்பாலம் மன்னில் தேசாபிபதி அவர்களாலும் அவரது பிரியபத்தினி யாராலும் 1928-ம் ஆண்டிலையில் திறந்து வைக்கப்பெற்றதால் லேடி மன்னில் பாலமென அழைக்கப்படு கிறது. சட்டநிருபணசபையில் மட் டக்களப்புப் பிரதிகிதியா யிருந்த திரு E. R. தம்பிமுத்து அவர்களின் கன்முயற்சியால் இப்பாலம் கட்டப் பட்டது. இதனைத் திறந்துவைக் கும்போது மன்னில் தேசாபிபதியவர் கள் இதற்குத் தம்பிமுத்து பாலமென காமகரண மிடவேண்டுமென்று குறிப் பிட்டார்.

கடற்கரையோரத்தால் செல்லும் மட்டக்களப்பு—கல்முனை வீதியின் 12-ங் கட்டையடியில் குருக்கள்மடம் என்று ஓர் கிறு கிராம முண்டு. அவ் விடத்தில் ஒரு கிணறு தோண்டும் போது ஓர் புத்தசிலை கண்டெடுக்கப் பட்டு அவ்விடத்திற்றானே ஒரு சைவக் கோயிலின் முற்றத்தில் காட் டப்பட்டிருக்கின்றது. 14-ம் கட்டை யடியில் கழுதாவளையென்னும் ஓர் சிறு கிராமமுண்டு. இவ்விடத்தில் ஓர் கள்ளுத்தவறணை யிருக்கதென் றும் அதில் கள்ளு பிற்றவர் வெள்ளே றித்தவர் (அல்லது வெள்ளாளரென் னும் பெயருடையவர்) என்றும் அவ்வு கள்ளுண்பவர்கள் "கள்ளுத்தர வெள்ளேயர" எனக் கேட்டுவக்தன ரென்றும் அதனுல் அவ்விடம் கழுதா வளை யெனப்பட்டதென்றும் ஓர் ஐதீ கமுளதாக கண்பர் திரு. S. L. குண ரத்தினம் எமக்குக் கூறினர். இது சிங்களப்பெயரெனக் கொள்வதே சரி.

அதற் கப்பால் ஒந்தாச்சி மடம் என்னு மிடத்திற்குச் சென்றோம். இவ்விடப் பெயர் உகந்தாச்சி (அல் லது உகந்த ஆசாரி) என்னுமோர் கன்னலின் இருப்பிடம் (அல்லது மடமிருந்த இடம்) என ஓர் ஐதீக முளது. இன்றும் இவ்விடத்தில் கன் னிரே குடியிருக்கின்றர்கள். செப் புப் பாத்திரங்கள் இவ்விடத்திற் செய்து விற்கப்படுகின்றன. இவ் விடத்தில் மட்டக்களப்புவாவி வீதி யை மேலிப் பாய்வது வழக்கம். அன்று முக்காலடி உயரத்திற்குமேல் வீதியை மேலிப் பாய்ந்தபோதும் எமது மோட்டார்வண்டி அதற்கூடா கச் சென்று கோட்டைக்கல்லாறு என்னுமிடத்தைச் சேர்ந்தது.

போர்த்துகேயர் மட்டக்களப்பை ஆளுகைபுரியுங்காலத்தில் ஒல்லாந்த ரின் கப்பல்கள் கரைசேர்ந்தவிடமும் அவர்கள் கோட்டை கட்ட எத்த னித்தவிடமும் இதுவென கூடப்படு கிறது. ஒல்லாந்தர் கட்ட எத்த னித்த கோட்டையின் அத்திவாரக் கற்கள் இன்றும் அழிக்த நிலைமையி லிருந்து அச்சம்பவத்தை நினைவுறுத் துன்றன. இதற்கு அடுத்தாற் போல் கல்லாறு என்னுமிடத்திலும் மட்டக்களப்புவாவி முக்காலடி உய ரத்திற்குமேல் வீதியைமேலிப் பாய்க் தது. காம் அதற்கூடாகச் சென்று கல்முனையை அடைந்தோம்.

கல்முனை ஓர் சிறிய கடற்கரைப் பட்டினம். அங்கே அரசினர் வைத் தியசாலை யொன்றும் உவெஸ்லியன் மிஷன் வைத்தியசாலை யொன்றும் உள. அரசினர் வைத்தியசாலையிலே இரு யாழ்ப்பாணத்தவர் நிலைம வைத்தியராகவும் உதவி வைத்திய ராகவும் கடமை செய்தனர். இவ்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

பாலர்பகுதி.

'இளவரசன் ஹம்லெற்'

சுப்புமாமா] (முற்றொடர்) [எழுதியது.

ஹம்லெற் இவ்வாறு ஸ்திரமற்ற மனத்தோடு இருக்கும்போது, அங்கு சில நடிகர்கள் வந்தார்கள். இவர்களுடைய நடனத்தைக் கண்டு ஹம்லெற் முன்னாட்களில் மகிழ்ச்சியடைந்ததுண்டு. அதிலும் சிறப்பாக அவர்களில் ஒருவன் ட்ரோய் நகரத்து வயோதிக மன்னனாகிய பிரயம் என்பவனின் மரணத்தையும் அதனால் அம்மன்னனின் இராணி ஹெக்குபா என்பவள் அடைந்த துக்கத்தையும் வர்ணித்துக் கூறும் பகுதியை எடுத்துக் கூறுவதைக் கேட்பதில் ஹம்லெற்றுக்கு அதிக விருப்பம் உண்டு. ஆகவே, ஹம்லெற் தனது பழைய நண்பர்களாகிய அந்நடிகர்களை வரவேற்றான். முன்னர்த் தான் அவர்களிடம் கேட்ட அந்தப் பேச்சின் இனிமை நினைவுக்குவரவே, ஹம்லெற் மீளவும் ஒருகால் அதனைப் பேசிக் காட்டுமாறு அந் நடிகனை வேண்டிக் கொண்டான். ஹம்லெற்றின் வேண்டுகோளுக் கிணங்கி அந் நடிகன் அதனை மிகுந்த உற்சாகம் விளைக்கக் கூடிய முறையிற் பேசிக் காட்டினான். அதில், ஆற்றல் குன்றியிருந்த வயோதிக மன்னன் கொடுமையாகக் கொலை செய்யப்பட்ட வகையும் அவனது சனங்களும் நகரும் நிர்க்கிரையாக்கப் பட்ட வகையும் அதனால் இராணி பைத்தியங் கொண்டவர்கள் போல நின்று அடைந்த துன்பமும், அவள் காலில் செருப்பின்றியும், மணிமுடி தரித்த தலையில் ஒரு கந்தையைப் போட்டுக் கொண்டும், அரசியர்க்குரிய அழகிய ஆடைகளை யணிந்த மேனியிற் கந்தைத்துணிகளைக் கண்டபடி தூக்கிப் போட்டுக் கொண்டும் விரைவாக மாளிகையை விட்டிறங்கி ஓடிய காட்சியும் ஆகிய இவையெல்லாம் கேட்டோர்கண் முன் உண்மையில் நடந்தது போலத் தோன்றக் கூடியதாகவும், பக்கத்து நின்றோரது கண்களில் நீரரும்பக் கூடியதாகவும், அந் நடிகனால் கண்ணீர் வடிய நாக்குழற நின்று பேசிக் காட்டப்பட்டது. இது ஹம்லெற்றுக்கு ஆலோசனையை உண்டுபண்ணிற்று. "ஹெக்குபா என்ற இராணி பல நூற்றாண்டுகளுக்கு முன் இறந்து பட்டவள். அவளை இந்நடிகன் கண்டே இருக்க வில்லை. அங்ஙனமாகவும் இவன் அவளுக்காக இவ்வளவு தூரம் கண்ணீர் வடிப்பானாயின், உண்மையில் ஒரு மன்னன் —என் தந்தை — கொலை செய்யப் பட்டிருப்பவும், நான் அதனால் அசைவுறாது, மறந்து ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்திக் கிடக்கின்றேனே, பழிக்குப் பழி வாங்காது சோம்பிக் கிடக்கின்றேனே! என் சோம்பல் தான் என்னே" என்று தன்னுட் சிந்தித்தான். நாடகம் நடிப்போரையும், அவர்கள் நடிக்குந் திறமையையும், அதனைப் பார்த்திருப்போரது மனத்திலுண்டாகும் உணர்ச்சிகளையும் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த ஹம்லெற்றுக்கு உடனே ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது. அஃதாவது, கொலை செய்தாரொருவன், நாடக மேடையில் கொலையொன்று நடித்துக் காட்டப் பட்டதைக் கண்டதும், தனது செயலோடு அஃது ஒத்திருந்த தன்மையால், உடனே உணர்ச்சி மிகுந்து தானும் கொலை செய்தவன் என்னும் உண்மையைச் சொல்லி விட்டான் என்பதே. ஆகவே, இந் நடிகர்களைக் கொண்டு தனது தந்தையின் கொலை போன்ற கொலைச்சம்பவம் ஒன்றை நடிப்பிக்க வேண்டுமென்றும், அதற்குத் தன் சிற்றப்பனையும் அழைத்தல் வேண்டுமென்றும் நாடகம் நடிக்கும் போது, தான் மறைவிடத்திலிருந்து தன் சிற்றப்பனுடைய செயல்களை இரகசியமாக அவதானிக்க வேண்டுமென்றும் அதிலிருந்து அவன் உண்மையில் தன் தந்தையைக் கொலை செய்தானோ அல்லனோ என்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டுமென்றுந் தீர்மானித்தான். இதற்கென ஒரு நாடகத்தை ஆயத்தப் படுத்த உத்தரவிட்டான். அந் நாடகத்திற்கு வருமாறு மன்னனுக்கும் இராணிக்கும் அழைப்புப் பத்திரமும் அனுப்பினான்.

வியன்னாவிலுள்ள ஒரு கோமகன் கொலை செய்யப்பட்ட வரலாற்றை நாடகத்தின் கதையாகும். அக் கோமகனின் பெயர் கொன்ஸாகோ; அவனது மனைவியின் பெயர் பப்ரிஸ்ரா. கோமகனின் நெருங்கிய சுற்றத்தவனாகிய லூஸியானஸ் என்னும் ஒருவன் கோமகனை நஞ்சிட்டுக் கொன்று அவனது சொத்துக்களைத் தனதாக்கிக் கொள்கின்றான். கொலை நடந்த சின்னாட்களில், இறந்த கோமகனது மனைவியாகிய பப்ரிஸ்ரா என்பவளையும் தனது மனைவியாக்கிக்கொள்கின்றான்.

ஹம்லெற்வைத்த பொறியை உணராதாராகிய அரசனும் அரசியும் நாடகம் பார்க்க வந்து உட்கார்ந்தார்கள். அரசனோடு அரசவையைச் சேர்ந்தோரும் வந்து உட்கார்ந்தனர். ஹம்லெற் அரசனை அவதானிப்பதற்காக அரசனுக்கருகில் ஓரிடத்தில் உட்கார்ந்தான். நாடகம் ஆரம்பித்த முதலாவதாகக் கொன்ஸாகோவும் அவனது மனைவியும் சம்பாஷித்தனர். அச் சம்பாஷணையில் கொன்ஸாகோவின் மனைவி தன் காதலைக் காட்டும் உறுதி மொழிகளை யெல்லாம் தன் நாயகனுக்குத் தெரிவிக்கிறாள். கொன்ஸாகோ தனக்கு முன் இறக்க நேரிடின், தான் இரண்டாம் விவாகம் செய்து கொள்ளப் போவதில்லையென்றும், தமது முதற் புருஷர்களைக் கொலை செய்யும் ஸ்திரீகளே இரண்டாவது மணஞ் செய்து கொள்வார்களென்றும் கூறுகிறாள். இச் சமயத்தில் ஹம்லெற் தனது சிற்றப்பனை அவதானித்தான். அரசனது முகம் நிற வேற்றுமை யடைந்தது. அவனுக்கும் இராணிக்கும் இவ்வார்த்தைகள் வேப்பிலைபோலக் கைப்பதாக இருந்தன. மேலும், நாடகம் தொடர்ந்து நடைபெற்றது. கதையின்படி லூஸியானஸ் என்பான் கொன்ஸாகோ பூங்காவில் நித்திரை செய்யும் போது அவனுக்கு நஞ்சிடுதற்கு வருகின்றான். இச் செயல், தனது சகோதரனாகிய பழைய அரசனுக்குத் தான் செய்த கொடிய செயலோடு ஒத்திருந்ததைக் கண்ட அரசனை அவனது மனச்சாட்சி உறுத்தவே, அவன் அதைச் சகித்துக் கொண்டு நாடகத்தின் எஞ்சிய பாகம் முடியும் வரை அங்கு இருக்க முடியாதவனானான். ஆகவே, திடீரெனத் தனக்குச் சுகவீனம் ஏற்பட்டதாகக்காட்டி உடனே நாடக மண்டபத்தை விட்டகன்றான். மன்னன் அவ் விடத்தை விட்டகலவே, நாடகமும் நிறுத்தப் பட்டது. ஹம்லெற்றோ தன் தந்தையின் ஆவி வடிவம் கூறியவை அனைத்தும் உண்மையென்பதற்குப் போதிய சான்று காண்பானாயினன். உடனே அவனுக்கு ஒரு பெரிய ஐயம் நீங்கிற்று. ஆவி வடிவம் கூறிய ஆணைத்தையும் தான் நம்புவதாகத் தன் நண்பன் ஹொரேஷியோவுக்கு எடுத்துக் கூறினான். ஆயின், பழிக்குப் பழி வாங்குதற்குரிய வழிவகைகளை அவன் தீர்மானிப்பதற்கிடையிலேயே, அவனது சிற்றப்பனே தன் தந்தையைக் கொன்றவன் என்றது அவனுக்கு நிச்சயமாகத் தெரிவிக்கப் பட்டது. அவனது தாயாகிய இராணி ஓர் இரகசியச் சம்பாஷணைக்காக, அவனைத் தனது அறைக்கு வரும்படி அழைப்பினாள்.

—வரும்

கல்முனையின் கண்கொளாக் காட்சி

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஊரில் கத்தோலிக்க தேவாலயமொன்றும் உவெஸ்லியன் மிஷன் தேவாலயமொன்றும் இவைகளைச் சேர்ந்த பள்ளிக்கூடங்களு மிருக்கின்றன. உவெஸ்லியன் மிஷன் இவ்வூரில் மிகவுஞ் சிறந்த ஊழியம் புரிந்துவருவதாகக் கேள்வியுற்றோம். பிரயாணிகள் தங்க ஓர் வாடிவீடும் அங்குண்டு. பகிரங்க வேலை இலாகாவுக்கும் நீர்ப்பாய்ச்சல் இலாகாவுக்கும் ஒவ்வொரு கிளைக்கந்தோர் இருக்கின்றது. தோட்டச் செய்கையை விருத்திசெய்யும் இலாகா உத்தியோகஸ்தர் ஒருவரும் பட்டின சுகாதார உத்தியோகத்தர் ஒருவரும் இவ்வூரில் கடமைசெய்கிறார்கள். பட்டினத்தின் நடுவே தபாற்கந்தோர் அமைக்கப்பெற்றிருக்கின்றது. ஒரு மாசத்திற்கு ஒரு கிழமை மட்டக்களப்பு நீதவான் வந்து பொலிஸ் கோட்டு டிஸ்திறிக்கோட்டு வழக்குகளை விசாரணைசெய்ய ஓர் நீதிஸ்தலம் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்குள்ள சந்தையில் காலையிலன்றி மாலையில் காய்கறி விற்பனையில்லை. இங்கு வெண்மணலால் நிரப்பப்பெற்ற ஓர் விசாலமான கடற்கரை யுண்டு. ஆனால் இஃது காலைகளில் அவ்வூராருக்கு மலசலங் கழிக்க உதவுகிறதே யன்றிக் கொள்ளுப்பிட்டி பம்பலப்பிட்டி வெள்ளவத்தைக் கடற்கரைகளைப்போல் மாலையில் காற்று வாங்குகிறவர்களால் உபயோகிக்கப்படுவதில்லை.

இவ்வூர் மக்கள் அநேகமாகச் சைவ சமயிகளேயாவர். சில கதலிக்கிறீஸ்தவரும் சில புரொடெஸ்தாந் கிறிஸ்தவரும் சில முகமதியர்களு முண்டு. இலங்கை போர்த்துக்கேய ராட்சியிலிருந்தகாலத்தில் இங்கு வந்து குடியேறிய சில போர்த்துக்கேய குடும்பங்கள் இப்போதும் இங்கேவசிக்கின்றார்கள். சென்ற 300 ஆண்டுகளுக்கிடையில் இவர்கள் தம் நிறத்தை யிழந்து, பாஷையை யிழந்து, சுதேசிகளுடன் விவாகஞ்செய்து, போர்த்துக்கேயம், தமிழ், சிங்களம், அராபி யல்லாத ஒருமிசிர (கலவன்) பாஷை பேசுகின்றார்கள், தச்சுவேலை, கொல்லவேலை முதலிய தொழில்கள் புரிகின்றார்கள். இவர்கள் உடையைக் கவனிக்குமளவில் வீட்டில் சுதேச உடையும் வீதியில் தம் சொந்த உடையையும் அணிகின்றார்கள். கஞ்சிக்குப் பயறு போட்டாற்போல் சிலர் அரசினர் உத்தியோக நிலையங்களிலும் கடமை செய்துவருகிறார்கள்.

கல்முனை மக்கள் கத்தரிக்காயை வழுதலங்காயென்பர். பூசினிக்காயைச் சுரைக்காயென்பர். சுரைக்காயை நாடங்காயென்பர். கப்பல் வாழைப்பழத்தை கோழிச்சூடன் அல்லது பறங்கிப்பழ மென்பர். அரிசியை எரிசியென்பர். முடியாததை ஒண்ணாதென்பர். சோறினை (புளிக்கறியை) ஆணம் என்பர். திருப்பிவை யென்பதைத் திருக்கிவை யென்பர். மலசலங் கழித்துவிட்டே னென்பதைக் காட்டுக்குப் போனேனென்பர். மாவள்ளிக்கிழங்கை மையோக்கிழங்கென்பர். ஐந்து சதத்தை ஒருகா சென்பர். பொலிஸ் விதானையை பொலிஸ்தலைமை யென்பர். ஆறு கொத்தை ஒரு மரக்காலென்பர். முப்பது மரக்காலை ஒரு அவணமென்பர். (ஒரு சாக்கிலே பத்து மரக்கால் கொள்ளும்). என்ன பேசும்போதும் அசை வைத்துப் பேசுவர். பட்டினம் போகிறாயா வென்பதைப் பட்டினம் போறெயாகா வென்பர். இப்படியே அவர்கள் பாஷைவேற்றுமை யடைந்திருப்பதைக் கவனிக்கலாம்.

தீபாவலிக் கொண்டாட்டத்தை இவ்வூர் மக்கள் அநேகமாகக் கொண்டாடுவது கிடையாது. யாழ்ப்பாணத்தில் தீபாவலி கொண்டாடும் முறையில் இவ்வூர் மக்கள் சித்திரை வருடப்பிறப்பைக் கொண்டாடுவார்கள். இஃது இவர்களை யடுத்துள்ள சிங்கள மக்களின் பழக்க வழக்கங்களை இவர்கள் கைப்பற்றியதாகக் கூறப்படுகிறது.

சித்திரைமாசத் தொடக்கம் ஆறு மாசங்களுக்கு இவ்விடங்களிற் கச்சான் என்னும் வெப்புக் காற்று அதிகமாக வீசுகின்றது. இக்காலத்தில் வெயில் அதிகம். மழை கிடையாது. இக்காற்றுப் பொதுவில் ஆண்களுக்குக் கூடாதெனவும், பெண்கள் இக்காலத்திலேதான் அநேகமாகப் பருவமடைவார்களென்றும், தென்னைகள் பாளை தள்ளுவனவென்றும் கூறப்படுகிறது.

கல்முனையில் நின்று பார்த்தால் ஊவாமலைகளின் அதி உன்னதக் காட்சிகளைக் காணலாம். கல்முனைக்கு அருகிலே காரைதீவு, பாண்டிருப்பு, நாய்ப்பட்டிமுனை யென மூன்று கிராமங்க ளுண்டு. யாழ்ப்பாணத்திலொன்றும் புத்தளத்திலொன்றும் மட்டக்களப்பிலொன்றுமாக இலங்கையில் மூன்று காரைதீவுக ளிருந்தன. யாழ்ப்பாணத்திலுள்ள காரைதீவு காரைநகராக மாறிப்போக இப்போது இரண்டு காரைதீவுகளே யுள. மட்டக்களப்பிலுள்ள காரைதீவு ஒருகாலம் ஓர் பெரிய தென்னந் தோட்டத்தை யுடையதா யிருந்தது. முதன்முதல் மோட்டார்வண்டி கொண்டுபோய் மட்டக்களப்பு மக்களுக்குக் காண்பித்தவர் அத்தோட்டச் சொந்தக்காரராகிய திரு. ஓ'கிறேடி (W. H. O' Grady) யேயாகும். பாண்டிருப்பு என்னும் கிராமத்திலே திரௌபதையம்மை கோயிலென ஓர் சைவக் கோயிலுண்டு. இலங்கையில் இரண்டு திரௌபதையம்மை கோயில்களேயுள. மற்றது உடப்பு எனப்படும் சிலாபத்தைச் சேர்ந்த கடற்கரையோரத்திலுள்ள ஒரு சைவக் கிராமத்திலுள்ளது. பாண்டிருப்புக் கோயிலில் புரட்டாதி மாசத்திலும் உடப்புக் கோயிலில் ஆடி மாசத்திலும் மகோற்சவம் ஆரம்பமாகி வருடாவருடம் நடைபெறுகின்றது. உற்சவ காலத்தில் பாரதக் கதை நிரமாக இவ்விரு கோயில்களிலும் படிக்கப்பெறும். மேலும் திரௌபதை திருக்கல்யாண உற்சவம் அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை முதலிய பல உற்சவங்கள் இக்கோயில்களில் சிறமமாகவும் சிறப்பாகவும் நடைபெறுகின்றன. தீக்குளித்தலாகிய அருஞ்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)



சுத்தமாகவும், முத்துப்போல்
வெண்மையாகவும்
பற்கள் இருக்க விரும்பினுல்

ரொடோபன்

பற்பசையை விரும்பி வாங்குங்கள்.

ரொடோபன் பற்பசை

ரசாயன முறையில் தயாரிக்கப்பட்டது.

மலாயாவின் சோல் ஏஜண்டுகள்:— நெய்னு முகம்மது அன் ஸன்ஸ்
22, பேட்ரி ரோட், சிங்கப்பூர்
22 & 24, ஓல்டுமார்க்கட் ஸ்றீற், கோலாலம்பூர்.

எல்லா டிஸ்பென்சரிகளிலும் ஷாப்களிலும் கிடைக்கும்.

(Mis 156. 10-9-37—)

லிட்டில்ஸ்



ஓரியென்டல் பாம்
நோவுகளுக்கும் வலிகளுக்கும்

Y 68. 1-1-37to31-12-37.

கடிதம்

இந்துசாதனப்
பத்திராதிபரவர்களுக்கு:—

வடஇலங்கையில் யாழ்ப்பாணத் தமிழர்கள் முன்னிலையில் சென்ற 1925 ஆ வைகாசி மீ 27 உ சேர். அம்பலவாணர் கனகசபையவர்கள் இலங்கா ஆயுர்வேத வைத்திய கலாசாலையையும் அதையடுத்து ஆயுர்வேத ஆஸ்பத்திரியையும் திறந்து வைத்தனர். மாணுக்கர்கள் சென்ற 13 வருடமாகக் கற்றுத் தேர்ச்சி பெற்று வருகின்றார்கள். ஷெடி ஆஸ்பத்திரியில் நோயாளிகள் பரிகரிக்கப் படுகின்றனர். இவ் விஷயத்தைப் பல காலங்களில் மே. த. கவர்னர் அவர்களும் மந்திரிமார்களும், மற்றும் அங்கத்தவர்களும் இக் கலாசாலையையும் ஆஸ்பத்திரியையும் பார்வையிட்டுச் சென்றனர். இவ்வாறு ஒருவரின் உதவியின்றி ஷெடி கல்லூரியும் நடைபெற்று வரும் பொழுது, யாழ்ப்பாணத்திலுள்ள வைத்தியர்களிற் சிலர் அரசினரின் உதவி நன்கொடைப் பணத்தை யெடுத்துத் தாங்கள் சித்தவைத்தியசலாசாலையென்னும் போலி நாமத்துடன் தொடங்கும் நோக்கமாகக் கங்கணம் கட்டித் திரிகின்றனர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில 21-8-37-ல் சில வைத்தியரும், அவரைச் சேர்ந்த சிலரும் ஒரு கூட்டம் கூடினர். சித்த வைத்திய சாஸ்திரம் என ஒரு சாஸ்திரம் உளதோ? அநேக நூற்றூண்டுகளாக வைத்தியப் பயிற்சி செய்து வரும் வைத்திய இரத்தினங்கள், அகஸ்தியர், தேரையர் மற்றும் ஸ்ரீதன்வந்தரிபகவான் ஆகியவர்கள் எழுதி வைத்துள்ள காவியங்களையும், வசனங்களையும் படித்து மனிதருடைய பிணிகளைத் தீர்த்து வந்தனரென்றும் தெரிய வருகின்றது. மேற்படி வசனங்களிலும் காவியங்களிலும் சொல்லியிருக்கும் அடையாளங்களாகிய ஊன்றுகோல் முதலியவைகளைக் கையிற் பிடித்துக்கொண்டு, கக்கத்தில் வாகடப் பைகளையும் கொண்டு திரிகின்றனர்.

யாழ்ப்பாணத்து வைத்தியர்கள் ஒற்றுமையில்லாததால் தங்கள் தங்களுக்கு இசைந்தபடி கூட்டங்கள் கூடிப் பற்பல நாமங்களை யமைத்துத் தங்கள் தங்கள் வசதிக்கேற்ற ஒவ்வொரு வைத்தியசாலையைத் தொடக்கும் நோக்கமாக இடையிடையே சிலர் ஆரம்பிக்கின்றனர். அவ்வாறில்லாது ஏனைய வைத்தியர்களும் வைத்திய மாணவர்களும் வைத்திய அபிமானிகளும் இவ்விலங்கா ஆயுர்வேத கலாசாலைக்கு உதவி செய்ய முன் வருவார்களாக. அவ்வாறு செய்யத் தவறின் இந் நாட்டில் வழங்கி வரும் ஆயுர்வேத சாஸ்திரம் சிர்குலைந்து விடும். எங்களுக்குள் ஒற்றுமையின்றிக் குறுகிய மனத்துடனிருப்போமாயின், எங்கள் நாட்டில் சகோதரர்களுக்கும், மற்றும் சாகியத்தவரான சிங்களச் சகோதரர்களுக்கும் எவ்வாறு ஒற்றுமை ஏற்படுமென்பதை யான் தீர்க்கமாய் விளக்குகின்றேன். இவ்விதமான நற்காரியத்தைச் செய்து வரக் குறுகிய மனத்துடன் தங்கள் தங்கள் வசதிகளுக்கேற்ப நாமங்களைப் பரப்பி வருவது கற்றவர்களாகிய வைத்தியர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நியாயமா? இனிமேலாவது வைத்திய சாஸ்திரத்தைக் கற்கும் மாணவர்களும், வைத்தியர்களும், மற்றும் அபிமானிகளும் யாழ்ப்பாணத்திற் சென்ற 13 வருடமாக நடைபெற்றுவரும் இலங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரிக்கு அரசினர் உதவும் உதவிநன்கொடைப் பணத்தை யெடுத்து ஷெடி கலாசாலையை நடத்த முன்வருவார்களாக. ஒருவர் உடல், பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் பண்ணிச் செய்து வந்த தவத்தை அழிக்கச் சிலர் முன்வந்திருக்கின்றனர். இது நீதியாகுமா? இப்பெயர்ப்பட்ட விஷயத்தை ஒருவர் செய்து வர எவ்வளவு காலம் சென்றிருக்கும் என்பதை எங்கள் நாட்டிலுள்ள வைத்தியர்களும், மற்றும் அபிமானிகளும் நன்கு விளங்குவார்களேயானல், எங்கள் நாடு தழைத்தோங்கு மென்பதற்கு ஐயமுண்டோ?

சோ. மு. பொன்னையா என்னுமொருவர் கொழும்பிலுள்ள சுதேச வைத்திய கலாசாலையில் 1929 ம் ஆண்டு ஓர் பதவி கேட்டனர். அங்கு அவர் நிராகரிக்கப்பட இவ்விலங்கா ஆயுர்வேத வைத்திய கல்லூரியின் தலைவரும் பரிபாலகருமா யிருந்த பண்டிதர், டாக்டர், ஜே. பஸ்தியாம் பிள்ளையிடம் ஒரு பதவி கேட்டனர்; அங்கும் நிராகரிக்கப்பட 1916 ஆ தொடக்கமாக நடந்து ஓய்ந்துபோன வைத்தியசங்கத்துக் காரியதரிசியாக அமர்ந்து சுதேச வைத்திய சங்கமெனவும், தமிழ் வைத்தியமென்றும் சித்த வைத்தியமென்றும் பல நாமங்களோடு பல கூட்டங்களைக் கூடினர்; இவர் காலத்துக்குக் காலம் கூட்டங்களைக் கூடி விடுதல் இவர் படித்த சாஸ்திர சம்பந்தமா? 1935ம் ஆண்டு பரமேஸ்வரக் கல்லூரியில் ஓர் பாகத்தில் இவரும் இவரைச் சேர்ந்த வைத்தியரென நாமம் பூண்டவரும் போலிச் சித்த வைத்திய கலாசாலையென்னும் நாமத்துடனும், சுதேச வைத்திய சாலையெனவும் தமிழ் வைத்திய சாலை யெனனும் நாமத்துடனும் நடத்தினர்; அக் கலாசாலையை நடத்த முன் வந்த சோ. மு. பொன்னையா எல். ஐ. எம். என்பவர்யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தியர்களிடம் வருடசந்தாப் பெற்று அவ்வூதிய மூலமாகவே இக் கலாசாலையை நடத்த முன் வந்தார் என்பது விளங்குகின்றது. இவர் இக் கலாசாலையை நடத்த இயலாமக் கைசோர விட்டனர். அவர் அவ்வாறு விட்டதன் நோக்கம் யாதெனில் வைத்தியராயுள்ளவர்களும் மற்றும் அங்கத்தவர்களும் வருட சந்தாப் பணத்தைக் கொடுக்க மறுத்தமையே யாகும்; இவர் போன்ற சிலரும் வேறு கூட்டங்கள் கூடி ஒவ்வொருவரும் தங்களுக்கேற்ற கலாசாலைகளைத் தொடங்கும் நோக்கமாகத் தங்களுக்கு வசதியான இடங்களிற் கூடி வருகின்றனர்; இது கற்றவர்கட்கு அடுக்குமா?

இப்பெயர்ப்பட்ட முறையால் இப்பெயர்ப்பட்ட சங்கங்களும் கலாசாலைகளும் தொடங்க முன் வந்தவர்களும் எத்தனை மாதம், எத்தனை கிழமைகளில் விட்டுச் செல்வார்களோ தெரிகிலன்; ஷெடி இலங்கா ஆயுர்வேத வைத்திய கலாசாலையையும் ஆஸ்பத்திரியையும் தரிசித்துச் சென்ற ஸ்ரீமான்கள் ஜோர்ஜ் G De சில்வா, D T ஜெயா, குணரெத்தின, S A விஜயகம் பிள்ளை, சேர். ஹியூகிளிபோட் (பழைய கவர்னர்) நடேசையர் சேர் ஸ்ரான்லி (பழைய கவர்னர்) T S பணபொக்க, A H சிவன்ஸ், K பாலசிங்கம், N செல்லத்துரை, W A சில்வா (சுகாதாரமந்திரி) ஆகிய இவர்கள் இக் கலாசாலைக்கு அவசியம் அரசினர் உதவி நன்கொடைப்பணம் அளிக்க வேண்டு மென்று எழுதிச் சென்றும் இது விஷயத்தில் அரசினர் கவனம் செலுத்தவில்லை.

ஆயுர்வேத சாஸ்திரமே யாழ்ப்பாணத்திலும்மற்றையவிடங்களிலும் நடைபெற்று வருகின்றதென்பதற்குச் சந்தேகமுண்டோ? இவ்வாறு மே. த. கவர்னரும், மந்திரிமாரும், மற்றும் அங்கத்தவர்களும் இக்கலாசாலைக்கு உதவியளிக்க வேண்டுமென எழுதிச் சென்றது எங்கள் யாழ்ப்பாணத்துள்ள வைத்திய மாணவர்களுக்கும், வைத்தியர்களுக்கும், வைத்தியாபிமானிகளுக்கும் போதிய நன்மதிப்பைத் தருவதாகும். இக்கலா கலாசாலையை ஸ்தாபனஞ் செய்த பண்டிதர், டாக்டர். ஜே. வஸ்தியாம் பிள்ளையவர்களுக்கும், தற்போது நடாத்திவரும் பிரமஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயங்காரைத் தலைமையாகக் கொண்டு நடாத்தும் சங்கத்துக்கும் நதிகூறுகின்றேன்.

இனிமேலாவது, மே. த. கவர்னரும் மந்திரிமாரும், மற்றும் அங்கத்தவர்களும், குறித்த கலாசாலைக்கு உதவி செய்ய முன்வருவார்களாக.

இங்ஙனம்,
நா விநாயகமூர்த்தி L V MB&A V
ஆயுர்வேத வைத்தியர்

சங்கிலி அறுத்த வழக்கு

50ருபா பிணையும் நன்னடத்தையும்.

(நமது நிருபர்)

கல்லூர்க் கந்தசுவாமி கோவில் சங்கிலி அறுத்த வழக்கொன்றில் மயிலிட்டியில் வசிக்கும் என். சுப்பிரமணியம் என்பவர் தான் குற்றவாளியென ஒப்புக்கொண்டதன்பேரில் பொலிஸ்நீதிபதிஎதிரியை 50 ரூபாப் பிணையில் ஒரு வருட நன்னடத்தையிற் போகும்படி விட்டார்.

பெண்ணைக் கடத்திச் சென்றதாக வழக்கு

கோட்டில் தாய் தந்தை சாட்சியம்

[நமது நிருபர்]

யாழ்ப்பாணம், 9௳

லெக்ஷுமி என்ற 15 பிராயமுள்ள பெண்ணைக் கடத்திச் சென்றவிட்டதாகக் கோண்டாவிலைச்சேர்ந்த (1) கந்தன் மகனை பொன்னி, (2) வி. ஆறுமுகத்தான், (3) எஸ். முருகேசன் ஆகியவர்கள்மீது குற்றஞ்சாட்டிச் சப் இன்ஸ்பெக்டர் காதர் ஓர் வழக்கை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் தாக்கல் செய்தார்.

லெக்ஷுமி என்ற பெண்ணின் தந்தை சின்னப்பொடியும் தாயார் நன்னியும் வாக்குமூலம் கொடுத்தனர். அதன் விபரம் வருமாறு:—

இம்மாதம் 7-ந் தேதியன்று காலை 10 மணி சுமாருக்கு முதல் எதிரி பொன்னியென்பவள் நன்னிவீட்டிற்குச் சென்று செவிட்டு ஊமைப் பெண்ணை மேற்படி லெக்ஷுமியை புகையிலைக் கட்டுகளைச் சுமக்க வருமாறு கூப்பிட்டாள்.

லெக்ஷுமி பொன்னியுடன் வீட்டினின்றும் வெளியே வந்ததும் அவர்கள் இருவரையும் 2 வது 3 வது எதிரிகள் சந்தித்தனர். அப்பால் அவர்கள் நால்வரும் கொக்குவில் திசையை நோக்கிச் சென்றனர். இதைக் கவனித்த லெக்ஷுமியின் இளையசகோதரி 12 வயதுள்ள செல்லம்மா ஏதோ சந்தேகப்பட்டு விஷயத்தை அவளது தாயாரிடம் தெரிவித்தாள். அது சமயம் நன்னி புகையிலைக் கட்டுகளைக் கட்டிக் கொண்டிருந்தாள். அப்பால் பெற்றோர்கள் லெக்ஷுமியைத் தேட ஆரம்பித்தனர். ஆனல் லெட்சுமி இருக்கும் இடம் தெரியவில்லை.

அப்பால் நீதிபதி எதிரிகளை இம்மாதம் 16ந்தேதி கோட்டில் கொண்டுவரும்படி எதிரிகளுக்கு வாறண்டு பிறப்பித்தார்.

விவாகம்

சிவஞானரத்தினம்—பத்மாவதி

சென்ற வியாழக்கிழமையன்று காலை 8-30 மணியளவில் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த திரு. கனகரத்தினமவர்களின் சிரேஷ்ட புத்திரன் திருவளர் செல்வன் டக்டர் K சிவஞானரத்தினம் அவர்களுக்கும்உரும்பராய் முதலியார் V. பொன்னம்பலமவர்களின் புதல்வி திருவளர் செல்வி பத்மாவதிக்கும் மணமகளில்லத்தில் விவாகம் மிக்க சிறப்பாக நடைபெற்றது. அன்று பிற்பகல் மணமகன் வீட்டிலும் அடுத்த நாள் பிற்பகல் மணமகள் வீட்டிலும் உபசாரணைகள் நடைபெற்றன. இரு உபசாரணைகளுக்கும் பலர் சமுகமளித்திருந்தார்கள்.

மணமக்கள் சகல செல்வங்களும் பெற்று இனிது வாழ எல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

*

நடராஜா—புவனேஸ்வரி

வழக்கறிஞர் திரு. S. T. நடராஜா அவர்களுக்கும், வதுளை ரவுன் ஓவர்சியர் திரு. S. பொன்னையா அவர்களின் புத்திரி சௌபாக்கியவதி புவனேஸ்வரிக்கும் சென்ற வியாழக்கிழமை காலை 8-30 மணியளவிற்சண்டிருப்பாயிலுள்ள மணகளில்லத்தில் விவாகம் இனிது நிறைவேறியது.

மணமக்கள் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக.

விவாகம் நடக்கவில்லையாம்

சென்ற பத்திரிகையில், "தியாகராச ஐயர் — குப்பம்மாள்" என்னும் தலைப்பின்கீழ், அவ்விருவருக்கும் இம்மாதம் 6-ந் திகதி திங்கட்கிழமை விவாகம் நடந்ததாக ஒரு செய்தி வெளியிடப்பட்டது. இச் செய்தியை மேற்படி ஐயாவர்களின் சகோதரராகிய சோ. அண்ணுச்சாமிக் குருக்கள் அனுப்பியதாக, யாரோ சில விஷமிகள் பொய்யான கைச்சாத்துடன் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அனுப்பியவர் தாம் அனுப்பிய கடிதத்தோடு ஒரு ரூபாவையும் வைத்து அனுப்பியிருந்தார். இப்போது குறித்ததியாகராஜா ஐயாவர்கள் மேற்படி விவாகம் நடைபெறவில்லை என்று தெரிவிக்கிறர். ஆகவே, சென்ற பத்திரிகையில் வெளியான செய்திக்காக நாம் வருந்துகின்றோம்.

"இந்துசாதனம்" சொல்லாக்கப் போட்டி இல. 1

சரியான விடை

1 இ	ந்	து	சா	2 த	3 ன	ம்		4 சோ
ரா			5 சு	ப / வ	ம்		6 ம	க
ம		7 சு		ம்	8 ச	9 கு	ண	ம்
ன்		10 சி	11 சு			ல்	ன	
	12 சோ		13 ப	ரி	யா	ய	ம்	
14 க	லா	15 வ	தி			வி		
16 ப	ட்	டி	ன	ம்			17 மு	கை
ட	டு	ச	ம்		18 சா	ன	ஹி	
ம்		ம்			19 வ	ய	ல்	

சொல்லாக்கப் போட்டி இல. 1

—:0:—

பரிசு பெற்றவர்களின் விபரம்

1ம் பரிசு பெற்றவர்கள்

இல.		
1	1	ச. பாலிருபசிங்கம், நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்
7	2	செ. தில்லையம்பலம், ஆசிரியர் சண்டிலிப்பாய்வடக்கு, மானிப்பாய்
34	3	வி. கந்தையா, கச்சேரி, யாழ்ப்பாணம்
40	4	மிஸ். இராசம்மா தம்பையா, கந்தரோடை, சுன்னகம்
58	5	திருமதி பேரம்பலம் தெய்வானைப்பிள்ளை, மூளாய் தெற்கு, சுளிபுரம்
59	6	சி. சிவகுருநாதன், பசுபதிகிரி, வண்ணார்பண்ணை
60	7	,, ,, ,,
61	8	,, ,, ,,
65	9	J. K. சுந்தரக்குருக்கள், திருவாணைக்கூடம், மன்னார்

2-ம் பரிசு பெற்றவர்கள்

இல		
3	1	S. கணேசரத்தினம், ஆசுபத்திரிரோட் No. 3 கோட்டை, காலி
8	2	செ. தில்லையம்பலம், ஆசிரியர் சண்டிருப்பாய்வடக்கு,மானிப்பாய்
9	3	,, ,, ,,
11	4	வ. சு. பொன்னையா, டெகியோவத்தை
16	5	பெ. கணபதிப்பிள்ளை, அற்ரேணி ஜெனரல் ஆபீஸ், கொழும்பு
19	6	சு. நீலாயதாட்சி, ஐயனார்கோவில்வடக்குவீதி, வண்ணார்பண்ணை
44	7	சி. துரைராசா, 'Orion) கம்பளை
48	8	சிறீமதி: நாகம்மா கணபதிப்பிள்ளை, நெடுந்தீவு. ஊர்காவற்றுறை
49	9	மிஸ்ஸிஸ்: M. தம்பித்துரை, எகலியகொடை
56	10	திருமதி: பேரம்பலம் தெய்வானைப்பிள்ளை மூளாய் தெ. சுழிபுரம்
57	11	,, ,, ,,
62	12	S. நவரத்தினம் C/o S. சபாரத்தினம், செட்டித்தெரு, நல்லூர்
69	13	க. பாலசிங்கம், அம்மன்கோவிலடி, கோண்டாவில் கொக்குவில்
76	14	சம்பந்தர் குமாரசாமி, நெடுங்குளம்ரோட், சிவியாதெரு யாழ்ப்பா.
84	15	N. செல்வத்துரை, ஆசிரியர் துணைவி, A. M. பாடசாலை வட்டுக்கோட்டை

5ம், 6ம், 20ம், 21ம், 22ம் இலக்கத்தவர்களாகிய திரு. K. இராமலிங்கம், K. அருணசலம், மிஸிஸ் R. விஞசித்தம்பி என்னும் இவர்கள் கூப்பன் பணம் அனுப்பாமையால் அவர்கள்விடை யோசிக்கப்படவில்லை.

பரிசுப்பணத்தை நேரிற் பெற விரும்புபவர் வருகிற புதன்கிழமை 15-9-37 பிற்பகல் 5 மணிக்குள் வந்து பெற்றுக்கொள்ளவேண்டியது. ஏனையோர்க்கு அடுத்தநாள் தபால்மூலம் அனுப்பப்படும்.

"சொல்லாக்கப்போட்டி" இல. 1
போட்டி ஆசிரியர்.
C/o மானேஜர், இந்துசாதனம்,
வண்ணார்பண்ணை.

சுருவில் கன்னக்களவு வழக்கு

எதிரிக்குக் கடுங்காவற் றண்டனை

[நமது நிருபர்]

யாழ்ப்பாணம் 9௳

சுருவில் என்றவிடத்தைச் சேர்ந்த செல்லாச்சி என்பவள்வீட்டில் கடந்த ஜூன் மாதம் 20-ந் தேதியன்று இரவு கன்னம்வைத்து இரண்டு தாலிக்கொடிகள், ஒரு அட்டியல், ரொக்கம் ரூபா 2 (மொத்தம் பெறுமதி ரூபா 398) ஆகியவற்றைத் திருடிக் கொண்டுபோனதாக ஐயம்பிள்ளை தம்பு என்பவர்மீது குற்றஞ்சாட்டி ஓர் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

அவ்வழக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு நீதிபதி திரு. சி. குமாரசுவாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. அது சமையம் செல்லாச்சி சாட்சியம் கொடுக்கையில், எதிரி சம்பவத்தன்று வீட்டிற்குள் நடமாடுகையில் தம் காலிற் பட்டுக் கீழே விழுந்ததாகவும், உடன் தாம் விழித்துக்கொண்டதும் எதிரி ஓட்டம்பிடித்ததாகவும், அதன் மீது தாலும் தன் தாயாரும் எதிரியைப் பின்தொடர்ந்ததாகவும் கூறினார்.

அப்பால் மற்றுஞ்சிலர் சாட்சியம் கொடுத்தபின்னர், நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு எதிரிக்கு ஒருவருடக் கடுங்காவற் றண்டனை விதித்தார்.

எங்கள் பஞ்சாங்கத்தை உபயோகிக்கும் அறிஞர்கட்கு அறிவிப்பு

இந்த ஈசுரஞு புரட்டாதிமீ ௩௨ சனி (வக்கிரகதியாக) பூரட்டாதி மூன்றும் பாதத்திற்பிரவேசித்துப் பின் தைமீ ௩௨ பூரட்டாதி நான்காம் பாதத்திற் போவதாக எம்மாலச்சிடப்பட்ட பஞ்சாங்கத்திற் குறிக்கப்பட்டிருக்கிறது. குறித்த நக்ஷத்திர பாதத்திற்குரிய 'கும்பம்' என்னும் சொல் அச்சிற்றவறியதால், குறித்த கும்பம் என்னுஞ் சொல்லைச் சேர்த்து உபயோகித்துக்கொள்க. அக்காலங்களுக்குரிய கிரகசக்கரங்களிலும் மீனராசியிற் குறிக்கப்பெற்ற சனியைக் கும்பராசியில் திருத்திக் குறித்துக் கொள்க.

மாசிமீ ௩௨ குறித்த பாற்குன சுத்தத்தையும் ௨௦ ௩ ௨ யிற் கொள்க.

இங்ஙனம்,
ச. சோமசுந்தரஐயர்.
பருத்தித்துறை,
11-9-37.
(Mis. 119. 13-9-37.)

கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு

—:o:—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகும். இப்பாட்டகத்த, நளன் இசைமுகக்த தோளழகன் தமயந்தி அமைபோன்ற தோளழகி என இருவர்க்குத் தோட் பொருத்தங்கூறியிருத்தல் மிகவும் போற்றற்குரியது. எனவே இப்பாட்டு,

“மன்னனிற் சேர்ற மங்கைபுளவென அன்ன மெடுத்துரைக்கு தென்பது—

மற்று இங்ஙனம், பெண்ணின் பொருத்தமும் பெயரும் பேரெழிலும் அன்ன மறையக் கேட்ட மன்னன் இருந்த பெற்றியை இயம்பவும் முடியுமா? என்னே? அன்னம் உனக்கேற்ற அரிவை உளவென அறைந்த மாற்றம் மன்னன் உளத்தில் புகுமுன்னம், பொன்னின் மடப்பாவை தமயந்தி அவனுளம் புகுந்து விட்டாள். அதேபமையத்தில் உருவிலியும் தன் பொருவெஞ்சிலையை வளைத்துப் பூங்கணைகளைத் தொடுக்கின்றான். டார் மடங்கத கோமான் மார்பில் அப் பூங்கணைகள் பாய்கின்றன. அவன் பதைபதைக்கின்றான். ஆவி பதறுகின்றான். இந் நிலையிலும் மன்னன் அன்னத்தை மறந்து விடவில்லை. அன்னத்தினிடத்தில் அப்பெண் ஆர் மடந்தை பெனக் கேட்டறிய வெண்ணினன். அன்னத்தை விளித்து அவள் ஆர் மடந்தையெனக் கேட்டான். பெண்ணின் பொருத்தமும் பேரும் அழகும் அறிந்தபின் அப் பெண்ணின் மாட்டுக் கொண்ட காதலால் அவள் பெற்றுளை அறிதல் முறையாதலின் இதனை,

“அன்னமொழிந்த மொழிபுகா முன்புக்குத்
என்றி மனக்கோயில் கைக்கொள்ளச் —சொன்னமயில்
ஆர்மடந்தை யென்று னனங்கன் சிலை வளைப்பப்
பார்மடந்தை கோமான் பதைத்து”

எனப் படிப்பாருள்ளத்தில் நளன் இருந்த நிலை அங்ஙனமே படியாது மிக நயமாகப் புகழேந்தியார் புகன்றிருத்தல், புலமைக்கோர் பெருநிதியாகும். இப்பாட்டின் நலத்தை உரைத்தின்புறுவதினும் உணர்ந்தின்புறுதலே சாலச் சிறந்தது. இங்ஙனம் பொருள் நலமும் புலமை நலமும் பாட்டு முழுவதும் ஊற்றெடுத்துப் பாய்ந்து படிப்பாருள்ளத்தைப் பறித்துத் தன்பாலீர்க்கும் பண்புடனியக் கட்டளை யோடமைந்த திருத்தப்பாடுடைய வெண்பாவினாற் கட்டியுரைக்கும் விழுப்புலமைப் புகழேந்தியார்க்கே அமைந்ததொன்றாம். ஏனையோர்க்கு இங்ஙனம் விருத்தப்பாவிற் பாடுவதே மிக வருத்தப்பாடாகும். அவரெல்லாம் வேண்டா சொற்களை மிகுதியும் பெய்து புலமைக் கேலாப் புனைந்துரை படைத்துப் பெண்களின் உறுப்புக்கள் ஒவ்வொன்றினையும் பெரிதெடுத்துப் புகழ்ந்து நம் தமிழ்ப் பேரறிஞர் காட்டிய நாகரிகப் புலமை நெறிக்குப் பெருங்கேடுசூழும் பெற்றியராவர். இது கொண்டே புகழேந்திப் புலவரை 'வெண்பாவிற் புகழேந்தி' என ஆன்றோர் விதந்தெடுத்து விளம்பினரென்க. இன்னும் இவ்வியல்பினை எல்லாம் புகழேந்தியார் புலமை விழுப்பமென வேறோர் தனிக் கட்டுரையின்கண் அமையம் வாய்த்த விடத்து விளக்குதும். மற்று இது நிற்க இப்பாட்டு,

மணிமுடி மன்னனவ் மங்கையார் மகளென அணிநடை யன்னத்தை யறைகென வினவியது என்க.

மற்று இங்ஙனம் மன்னவனவளார் மகள் என்று அன்னத்தைக் கேட்க அவ்வன்னம் உரைக்கும் மாற்றம் மிக மிக அழகியது; அன்னம் மன்னனை எழுவடுதோண்மன்னே வென்று விளித்தது. யானுரைத்த ஒளிதவழ் கலன் அணி ஒண்ணுதலாள் உழவர் ஏர்களைத் தாண்டி நடத்தக் கொழுநுனியினுல் கிறப்பட்டு விழுந்த குவளை மலரை நீர் பேடையில் அவர்கள் மிதிப்பதினுல் அம் மலர்களிலிருந்து தேன் பாய்ந்தோடுகின்ற செந்நெல் வயல்களெல்லாம் நிறைந்து அலைமோசையவியா அணிநீர்வளமுடைய விதர்ப்பநாட்டை யாளும் கொடைவிதர்ப்பனெனுங் கோமான் பெற்றெடுத்து வளர்த்த ஓர் ஒப்பற்ற பூங்கொம்பு போல்வள் என்று கூறியது. இதனை,

எழுவடுதோண் மன்னு! விலங்கிழையோர் தூண்ட
கொழுநுதியிற் சாய்ந்த குவளை—யுழுநர்
மடைமதிப்பத் தேன்பாயும் மாடோலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு

எனப் புகழேந்திப் புலவர் கூறிப் போகின்றார். இதில் அப் புலவர் பெருமானின் விழுப்புலமை மிக ஊற்றெடுத்து ஓடுகின்றது. மங்கையார் மகளென்ன வழுத்திய மாற்றத்திலேயே அம் மங்கையைப் பெற்ற மன்னவன் வள்ளன்மையும், அவன் பணிக்குடை நிழற்றங்கும் அணிநாட்டின் பெருவளனும் அமைதரவோர் வெண்பாவால் ஆக்கிப் போதல் எத்துணை அருமையுடையதென்பதை ஆய்ந்து காண்பார்க்கு இச் செய்யுள் அளப்பருமுவகையை யள்ளித்தருமோர் அழியாப் புலமை வள்ளலன்றோ? சிந்தைக்குஞ் செவிக்கும் இனிக்குந் தீஞ்சுவைப் பேடகமன்றோ? பத்தழகும் ஒருவழிக் குழீப் பாவலருளமெலாம் பைந்தமிழின்பத்தை ஊற்றிப் புலவர் பெருமான் புகழேந்தியாரின் புலமை நிதியாய்த் திகழ்வ திப்பாட்டென்ச. எனவே இப்பாட்டு, கொடைவிதர்ப்பன் பெற்ற கோமகளவளென நடையிலன்னம் நளனுக் குரைத்தது என்க.

மற்று அன்னம் கொடைவிதர்ப்பனின் கோமகளிவளெனக் கூறுதலும் மன்னும் பெருவள மாவிந்தம் புரக்கும் மன்னனும் மகிழ்ச்சி மிகக் கொண்டான். அவ்வமையம் மங்கை தமயந்தியின் கற்பையும் பொற்பையும் பொங்கு புகழன்னம் மன்னனுளங் கொள வடித்துரைத்தது. உரைத்ததும் மன்னன் உவகை மிக்கூர்ந்து அன்னத்தை நோக்கி அன்னமே! நீயுரைத்த வன்னத்தை யெண்ணவே யென்னுவி சோருகின்றது. உனக்கு அம் மங்கையுடன் எவ்வகை மன்னுபெரு நட்பு வாய்ந்தது, என அன்னத்தை வென்ற மென்னடைத் தமயந்தியைத் தன் அளிதவழுள்ளத்தில் நயந்து மிக ஆர்வமுடன் கேட்டான். கேட்டதும் அன்னமறைந்த மாற்றம் மன்னனை யடிமை கொண்டு விட்டது. அன்னமறைந்த மாற்றமென்ன? யான் அந் நங்கையிடம் நடைகற்ற நட்புண்டு என்பதே. நடைகற்ற நட்புத் தனக்கும் தமயந்திக்குமுண்டென மடநடை யன்னம் வழுத்தலும், மன்னன் நளனிற்கு மங்கை தமயந்தி யிடத்து மன் பெருங் காதல் எழுந்தது எழுதலும் அவனின் நிலைதிரியா நெஞ்சம் நெகிழ்ந்தது; மன்னும் பெருமானம் மாய்ந்தது. நற்றனை நாணம் நடந்தது. மற்றினி யென்செய்வான் மன்னன். மருந்து பிறிதில்லாப் பெருந்துய ரெய்தி வருந்துகின்றான் அவ்வமையம் ஆறுமை மிகுதியான் அன்னத்தை நோக்கி அம்மன்னன் அறையும் மாற்றங்களைப் புகழேந்தியார்,

“இற்றது நெஞ்சமெழுந்தது பெருங்காதல்
அற்றது மான மழிந்ததுநாண்—மற்றினியுன்
வாயுடையா தென்னுடைய வாழ்வென்றான் வெங்காமத்
தீயுடைய நெஞ்சுடையான் றேர்ந்து”

எனப் புலமை நலனொழுகப் புகன்று போகின்றார். இப் பாட்டகத்து மன்னன் நளன் மங்கை தமயந்தி மாட்டுக் கொண்ட காதலால் தன் நெஞ்சமும் மானமும் நாணமும் நிலைகெட்டுப் போயினமைகளின் விஞ்சும் பேரெழிலாரம் மெல்லியலைப் புணர்தாலன்றி அவையவனிற் கலையா நின்று, வியா விழுப்பம் சயாதென்க. எனவே யவனின் வாழ்வு இவ்வளவில் மாய்ந்து விடுமன்றோ? மன்னனின் வாழ்வு மாயாதுன்னுதல், அன்னம் மன்னனின் அரும் பெருங்காதலைத் தாழ்குழற் பேதை தமயந்திக் கெடுத்தியம்பி அவளை மன்னனிடங் காதல் கொள்ளச் செய்யும் வளரநிலையானன்றோ? ஆக வேண்டும். இவற்றையெல்லாம் மீக மிக நுட்பமாயாய்ந்து,

“உன்வா யுடைய தென்னுடைய வாழ்வென்றான்” என மன்னன் அன்னத்திற் கறையும் மாற்றமாக யாத்தமைத்துள வரும் புலமையை ஆய்தொறும் ஆய்தொறும் ஆராவின்ப மளிக்கின்றது. இக்துணைப்பொருள் நயமும் ஓசை நயமும் ஒட்பமும் திட்பமும் வரையறவும் இச் சிறு சொற்றொடரில் ஒருவழி யமைதரப் பொருத்தித் தோலா மொழியின் மேலோரும் விழைதகு விழுப்பம் மேவி நவில்தொறும் நவில்தொறும் நயப்பமிக் கூர்ந்து சிந்தையிற் றேனூறித் தீஞ்சுவை பயக்க ஆக்கிப் போகும் பெருந்திரு, போக்கறு புலமைப் புகழேந்தியார்க்கே பொருந்துவதொன்றெனப் புகலுதல் மிகையாகாது. எனவே இப்பாட்டு, மேதகுமன்னன் விளங்கிளையாளைக் காதலித்தானெனக் கட்டுரைத்தது என்க.

இனி மற்றிங்ஙனம் கொடைவிதர்ப்பன் பெற்ற கொம்பனை மாவிந்தம் புரக்கும் மன்னர் மன்னன் நளன் காதலித்துக் கழறிய மாற்றங்களைக் கேட்ட மடவன்னம் என்னை நோக்கி வழுத்திய மாற்றமென்ன? மன்னாக மளிக்குந் தண்ணளிக் குடையாய்! நீ வருந்தற்க. வீமனின் செல்வ மகளாகிய தமயந்தியின் மென்முலைகளை உன்னுடைய பொன்பொலி தோள்களிற் பொருந்தச் செய்வேன் என்பதே. இவ்வகை யன்னமெடுத்தியம்பலும் மன்னன் நளன் மகிழ்ச்சி கொண்டான். அன்னத்தை அன்புடன் மின்னிடையிடம் சென்று விரைந்து மீள்வாய் என விடை கொடுத்தான். அன்னமும் மன்னனை விட்டகன்று அகல்வான் வழிப்பறந்து மன்னு பேரெழில் மங்கையிடஞ் செல வழிக் கொண்டது. மன்னனும் அன்னத்தின் சொல்லால் தன் ஆருயிரைத் தாங்கி யவணுற்றான். இதனைப் புகழேந்தியார்,

வீமன் திருமடந்தை மென்முலையை யுன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்—சேம
நெடுங்குடையா யென்றுரைத்து நீங்கியதே யன்னம்
ஒடுங்கிடையா டன்பா லுயர்ந்து.

எனச் செப்பிப் போகின்றார். இப் பாட்டகத்து மன்னனுக் கன்னம் உரைத்துப்போகும் உறுதிமொழியுள் நூற் செல்விவாய்ந்தினிமை பயக்கின்றது. “உன் வாயுடைய தென்னுடைய வாழ்வு” என வழுத்திய மன்னனுக்கு உன்தோளுடையாள் யான் சொன்ன தோகையெனும் பொருள் பொதிய வன்னம் புகலுதல் புலவர்க்கோர் பொருள் விருந்தாகும். எனவே இப்பாட்டு, திருந்திழை முலைகளைச் செல்வ நின் தோள்களிற் பொருத்துவ லென்றனம் புகன்று போயது என்க.

மற்று இங்ஙனம், மன்னனுளத்து மங்கையைப் புகுத்தி மங்கையுளத்து மன்னனனைப் புகுத்துவான் வழிக் கொண்ட வன்னம் புலவர் பாடும்பெரும்புகழெய்திப் பொலிதுக.

இனி மன்னனுளத்து மங்கையும் மங்கையுளத்து மன்னனுமாய் மாறிப்புகுமியல்பினை வருகின்ற கட்டுரையிற் காண்பாம்.

கந்தபுராணக் கவிநுட்பம்

பாயிரப் படலம்

(வித்துவ சிரோமணி ந.ச. பொன்னம்பலபிள்ளையவர்கள்வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.)

புடையக லிமயந் தன்னிற் புவனங்கண் முழுது மீண்ட
வடபுவி தாழ்ந்து தென்பா லுயர்தல மலையந் தன்னிற்
கடமுனி தன்னை யேவிக் கவுரியை மணந்து பின்னர்
அடன்மதவேளை நல்கி யனங்கனே யாகச்செய்தான்.

இடமகன்ற இமயமலையின் கண்ணே எல்லாவுலகத்திலுள்ளவர்களும் வந்து கூடியமையினுல் வடதிசைப் பூமி தாழ்ந்து தென்றிசைப் பூமி உயர்தலும், அகத்திய முனிவரைப் பொதியமலைக்குப் போகச்செய்து, பருவதவர்த்தனியைத் திருக்கல்யாணஞ் செய்து அதன்பின் வலிய மன்மதனை உயிர்பெறச் செய்து அருபியாகும்படி பரமசிவன் அருள் புரிந்தார் என்பது இதன் பொருள்.

கடமுனி - கும்பத்தில் உற்பவித்த முனிவர், பிரமா செய்த யாகத்தில் வைக்கப்பட்ட கும்பத்திலிருந்து தோன்றியவர்.

[பிரமாண்ட நபியாகிய விஷ்ணு முதலியோர் அங்கிருப்பவும் வாமனநபியாகிய அகத்தியமுனிவரையவினுர் தமது அன்பராகிய அம்முனிவர் வாயிலாகத் தமது திருவருட்டிறனை வெளிப்படுத்துதற்கென்க] (கக)

கூஉ. ‘‘மன்புனை கயிலை தன்னின் மலைமகளோடு மீண்டு’’

[ஊழிகாலத்திலுஞ் சத்தசமுத்திரங்களினுல் அழிதலின்றி நிலைபெற்றிருத்தலின் “மன்புனை கயிலை” என்றார். சூரபன்மனுனவன் காசிபமுனிவருக்கும் மாயைக்கும் பிள்ளையாகப் பிறந்த காலத்திற் சத்த தாதுக்கள் பொதிந்த உடம்பினனுயிருந்துபின்னர் ஆல வனத்திலே அருந்தவஞ் செய்த காலத்திற் பசுபதி ஆங்கு எழுந்தருளி வாராமை கண்டு, தன் உடம்பு முழுவதையும் வாளினுல் ஈர்ந்து ஈர்ந்து ஓமகுண்டத்திலிட்டு ஈற்றில் தானே அக்குண்டத்திற் சுவாலித்தேரியும் அக்கினி மத்தியிற் குதித்து இறைவனருளால் வச்சிரயாக்கையைப் பெற்றுன்; அப்படிப்பட்ட வச்சிரயாக்கையைப் பெற்ற சூரபன்மனைச் சத்ததாதுக்களாலாகிய உடம்பினர் தோல்வுதல் அரிதாதலின் பரமபதி தன் பெருநுதற்கட்டீயாற் சரவணபவனைத் தந்தாரென்க]

எக. ‘பூவினன் முதலாவுள்ள புங்கவர் யாரும் போற்ற’’

முக்கண் முன்னவன் படை - சர்வ சங்கார ருத்திரப்படைக்கலம்.

எஎ “சாாலினேங்கு தெய்வத்தணிகைமால் வரையின்மீது”

நாரதன்-இங்கே பிரேரகாசிரியர்; நவைதவிர் எயினமாது - பாசபந்தத்தினின்று நீங்கிய குறப்பெண்; முன்னர்ச் சுந்தரவல்லியாக அருந்தவஞ் செய்து தன்னிடத்துள்ள பாசபந்தம் நீங்கப்பெற்றுளென்றபடி. சீர் எழில் நலம் - இருவினையொப்பு மல பரிபாக மாகிய பரிபக்குவம். அவள் வயிற் சிந்தை வைத்தான்-அவளை ஆட்கொண்டருளத் திருவுளங்கொண்டார்.

என்றிவையனைத்துஞ் சூதனியம்பவு முனிவர் கேளாத்
துன்றிய மகிழ்வாற் சென்னி துளக்கியிங்கிதனைப் போல
வோன் றொரு கதையுங்கேளோமுரைத் தனைசுருக்கியாங்கள்
நன்றித னாலங்கேட்க நனிபெருங் காதல் கொண்டோம்.

என்று இவ்வரலாறனைத்தையும் சூதமகா முனிவர் பாயிரமாகத் தொகுத்துச் சொல்லுதலும் நைமிசவன முனிவர்கள் கேட்டுப் பெருமகிழ்ச்சியடைந்தாராய்ச் சிரக்கம்பனஞ் செய்து ‘முனீந்திரரே, இதனைப்போல இனிய சரிதை வேறு எதனையும் உம்மிடங் கேட்டிலேம். இக்கதையைச் சுருக்கமாகக் கூறியுள்ளீர், இதன் விரிவைக் கேட்டற்கு நாங்கள் மிகவும் அதிகமான ஆசை கொண்டோம் என்பது பொருள்.

கந்தவேள் ஆன்மாக்களை யீடேற்றும் வண்ணஞ் செய்த திருவிளையாடல்களையும் அப்பெருமானுடைய திருவருட்டிறனையுங் கேட்கக் கேட்கத் தெவிட்டுதலின்றி மேலும் மேலுங் கேட்டல் வேண்டுமென்ற ஆர்வம் அம் முனிவர்களிடத்துப் பிறந்தமையின் “இதனைப்போல ஒன்றொரு கதையுங் கேளேம்... யாங்கள் நன்றிதன் அகலங்கேட்க நனிபெருங் காதல்கொண்டோம்” என்றனர். ஆதியிற் பரமசிவன் திருநந்திதேவருக்கு உபதேசிக்க அவர் தம்மாணுக்கருக்கு உபதேசிக்க, அம்மாணுக்கர் பரம்பரையிலுள்ள சூதமகா முனிவர் இப்புராணத்தைச் சொல்ல, ஆர்வத்துடன் கேட்டோர் தவத்திற் சிறந்த நைமிசவன முனிவராயினர். புராணத்திற் சொல்லப்பட்ட கதைகளின் தத்துவார்த்தங்களை உள்ளபடி யுணர்ந்து பயன்பெறக் கூடிய ஞானமுள்ளவர்கள் அந்நைமிச முனிவர்களாவர். இங்ஙனமெல்லாமிருப்பவும் இக்காலத்துள்ள மௌட்டிகர் சிலர் புராணங்கள் பாமரசனங்களுக்காக ஆக்கப்பட்டன வென்றும் ஆனதால் தாம் அவைகளைப் படித்தலுங் கேட்டலும் அனுவசியக மென்றும் விபரீதம் பேசிப் புராணங்கட்குப் பொய்மை கற்பிக்கின்றார்கள். இவர்களுடைய அறியாமையையிட்டுப் பரிவுறுவதன்றி வேறு யாது செய்தல் முடியும். (அக)

கோட்டுவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
இல. 11561.

யாழ்ப்பாணடிஸ்திறிக்கோட்டின் 11561 ம் இலக்க வழக்கில் ககூஎ ம் ஸு புரட்டாதிமூ 8ம்தேதியைக்கொண்ட எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி ககூஎ ம் ஸு ஐப்பசிமூ 13ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

கோக்குவில் 1. அம்பலவாணர் சுந்தரமும்
2. பெண் மனோன்மணியும்
வழக்காளிகள்.

Vs

கோக்குவில் 1. இராமலிங்கம்இராசையாவும்
2. பெண் செல்லம்மாவும்
எதிரிகள்.

தீர்வைத்தொகை ரூபா (1899 உம்) 1937ஆ வைகாசி மாதம் 19ம் திகதி தொடக்கம் இதற்கு வருஷமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 154 சதம் 68 உம் எதிரிகளிடம் அறவிடப்படவேண்டியது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் நல்லூர்க் கோவிற்பற்று கோக்குவிலிறை “கனக்கன் நினைத்தது முடித்தான்” பா. நில இலா. 4 உம் மேற்படி “நினைத்தது முடித்தான்” பா. நில. இலா. ½உம் ஆகக்கூடி பா. நில. இலா. 4½ உம் கல்கிடும், இந்தக் காணிக்குள் இருக்கும் கிணற்றிற் பங்கும், எல்லை கிழக்கு வெள்ளவாய்க்கால், வடக்கு ஒழுங்கையும் கார்த்திகேசு பெண் நாகம்மாவினுதனமும், மேற்கு இந்தக் காணிக்கும் தெற்கெல்லைக் காணிக்கும் போக்குவரவுக்காக விடுபட்ட நிலமும், தெற்கு நாகலிங்கம் பெண் கனகம்மாவினுதனம். இது அடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

சே. சந்திரசேகரம்,
கொம்மிஷனர்.

யாழ்ப்பாணம்,
கோக்குவில், 11-9-37.
(Mis. 117. 13-9-37.)

ஆங்கிலேயரின் தேசிய உணர்ச்சி

இலங்கையரும் அவர்களைப் பின்பற்ற வேண்டும்

ஸேர். துரைசுவாமியின் சொற்பொழிவு

"நான் சமீபத்தில் ஐரோப்பாவுக்கு விஜயஞ் செய்திருந்த காலையில் என்னிடம் ஒரு ஆழ்ந்த உணர்ச்சியை உண்டுபண்ணியது அங்குள்ள பிரமாண்டமான கட்டிடங்களும், அழகிய காட்சி தரும் வைபவங்களும், படைகளும், கடற்படைகளும் அல்ல; ஆனல் ஆங்கிலேயர்களின் தேசிய உணர்ச்சியே என் உள்ளத்தைக் கவர்ந்தது" என்று நமது அரசாங்க சபைத் தலைவர் ஸேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி யவர்கள் சென்ற வியாழக்கிழமையன்று தேயிலைக் கட்டுப்பாட்டுப் பகுதிக் காலப் போக்குக் கிளப்பில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தியபொழுது கூறினர்.

அவர், மேலும் பேசியதாவது:— இங்கிலாந்திலுள்ள சனங்கள் தங்கள் வேலைகளை எவ்வாறு செய்தார்கள் என்பது இதெல்லாவற்றையும் விட என் மனத்தை அதிகமாகக் கவர்ந்தது.

ஒவ்வொரு மனிதனுக்கும் தான் கவனிக்கவேண்டிய ஒரு சொந்த அலுவல் இருந்தது. வீண் பேச்சுக்கு அங்கு நேரம் கிடையாது. அவர்களுடைய தேசிய உணர்ச்சியில் அவர்கள் கீழ் நாட்டினரையும் தோற்கடித்துவிட்டார்கள். எவ்வளவு தாழ்ந்த நிலைமையிலுள்ள தொழிலாளியும் தனது வயிற்றுப்பாட்டுக்காக மட்டும் வேலைசெய்யவில்லை. அவர்கள் தங்கள் வேலைகளைத் தேச சேவைக்காகச்செய்தார்கள். தேசமே அவர்களுடைய முக்கிய காரியமாக இருந்தது. தேசத் துவஜத்தைச் சுற்றி எல்லோரும் ஒன்று கூடினர்கள். அதுவே அவர்களுடைய மதமாக இருந்தது.

தேச சேவையில் ஆர்வம்

தேசத்துக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஆசை எல்லா மனிதர்களிடமுங் காணப்பட்டது. இலங்கைச் சனங்களும் இந்த முன்மாதிரியைப் பின்பற்றவேண்டும். இலங்கையர் தங்கள் தேசசேவையை நன்குகச் செய்ய முயலுகிறர்களென்பது உண்மை. ஆனல், அவர்கள் எதையாவது சாதித்திருக்கிறர்கள் என்பதற்குப் போதிய சான்று காணப்படவில்லை.

தேச சம்பிரதாயத்தை ஆங்கிலேயர்கள் மிகவும் மதிக்கிறர்கள். முற்காலங்களிலுள்ள தட்டு முட்டுச் சாமான்களின் துண்டுகளையும் கூட அவர்கள் வெகு பத்திரமாகக் காப்பாற்றுகிறர்கள். தற்கால நிலைமைக் கேற்றவாறு அவர்கள் சாமானிய சபையை அலங்கரிக்க முடியுமென்றாலும், சம்பிரதாயத்தைக் காப்பாற்ற வேண்டு மென்பதற்காக அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

பேச்சுரிமையை உபயோகிக்கும் முறை

இலங்கையிலுள்ள நாமும் நமது தேச சமுதாயத்தைப் புராதன சம்பிரதாயங்களைக்கொண்டே அமைக்க வேண்டும். இங்கிலாந்திலுள்ள சனங்களுக்குத் தாராளமான பேச்சுரிமை இருந்தாலும், மிகவும் மோசமாகக் குறை கூறுவதை அவர்கள் கண்டனஞ் செய்கிறர்கள். நாமும் ஆங்கிலேயர்களைப் பின்பற்றக் கூடாதா? மற்றவர்களுடைய குறைகளைக் கண்டனஞ் செய்வதோடு நாம் நின்றுவிடக்கூடாது. தேசிய அமைப்பில் உயர்ந்தவர்களும் தாழ்ந்தவர்களும் எல்லோரும் கலந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

ஒருவன் தனது வேலையை அற்பமாகக் கருதுவது பெருந் தவறு. தாழ்ந்த வேலையானாலுஞ் சரி, பொறுப்பான வேலையானாலுஞ் சரி, அதனுற் பெரிய பலனிருக்கிறது. இதை நீங்கள் சிந்திப்பீர்களேயாயின், முன்னேற்றமடைய யாதொரு தடையும் இராது. இதுவே உங்கள் சந்தோஷத்தின் மர்மமாகும். ஏன் நாம் நமது முன்னேர்களைப் பின்பற்றக் கூடாது? பெருஞ் செல்வத்திலும் அதிகாரத்திலும் எனக்கு நம்பிக்கை கிடையாது. அவைகள் தாமாகவே வரும். "உனது அயலானையும் உனது தொழிலையும் நீ நேசி" இதுவே சரி.

திரு பி. சரவணமுத்து கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

ஸேர். துரைசுவாமி யவர்களுக்கு நன்றி செலுத்தப்பட்டதும் கூட்டம் இனிது நிறைவேறியது.

அரசாங்கசபைக் கூட்டம்

போதிய அங்கத்தவர்களின்மையால் 10 நிமிஷம் தாமதம்

—o—

அரசாங்கசபை சென்ற வியாழக்கிழமை காலை பத்து மணிக்குக் கமிட்டிகளின் உப-தலைவர் திரு. ஆர். எஸ். தென்னக்கூன் தலைமையிற் கூடியது. சபை கமிட்டியில் வரவு செலவுத் திட்டம்பற்றி விவாதித்தது. அம்பாந்தோட்டை உதவி மாகாணத் தலைவரின் நடவடிக்கையைப் பற்றிச் சபையிற் பலத்த விவாதம் நடந்தது. 2—30 மணிக்குச் சபை மீண்டும் கூடியதும் கூட்டம் கூடுதற்கு வேண்டிய அங்கத்தவர் தொகை இல்லை. தலைமை வகித்த உப-தலைவர் திரு. சுஸந்தா டி. பொன்ஸேகா சபையை 10 நிமிடங்கள் வரை தாமதிக்கச் செய்தார். பின்னர்ச் சபை மீண்டும் கூடிய பொழுது குடியேற்றத் திட்டங்கள் பற்றி விவாதிக்கப் பட்டது. விவசாயப் பகுதியில் திரு. பீரிமன் பிரேரித்த வெட்டுப் பிரேரணைகள் தோல்வியடைந்தன. கால் நடைகள் பலனைப்பற்றி விவாதம் நடக்கும் பொழுது இரவு மணி 8-30 ஆனதால் சபை மற்றைநாட்காலை 10 மணிக்குக் கூடுவதாகப் பின்போடப் பட்டது.

வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அரசாங்க சபைக் கமிட்டிகளின் உப-தலைவர் திரு. ஆர். எஸ். தென்னக்கூன் தலைமையில் கூடியது. வரவு செலவுத் திட்டம் கமிட்டியில் ஆலோசிக்கப்பட்டது. காட்டுப்பகுதி மான்யங்கள் விவாதிக்கப்படும் பொழுது காட்டுச் சபைப் பிரதம அதிகாரியின் படிப்பணம் 1500 ரூபாயில்லையென்று அரசாங்கசபை முடிவு செய்திருக்கிறது. மே. த. தேசாதிபதி சேர். ஸட்வேட் ஸ்ரப்ஸ் அந்தப் படிப் பணத்தைக் கொடுக்கும்படி உத்தரவிட்டு மாதம் மாதம் கொடுபட்டு வருவது பற்றிக் குறிப்பிட்டார். இலங்கையிலேயே கிடைக்கும் மரங்களைப் பகிரங்கப் பகுதி உபயோகிக்கவேண்டு மென்று கோரப்பட்டது. வெளிநாட்டிலிருந்து தேக்கு இறக்குமதித் தடை வரி விதிக்க வேண்டு மென்று ஓர் ஆலோசனை கூறப்பட்டது. நீர்ப்பாசனப் பகுதி டிரக்டருக்கும் விவசாய மந்திரிக்கும் உள்ள வித்தியாசத்தை விசாரிக்க விசாரணைக்குழு நியமனம் பற்றி விவசாய மந்திரி எடுத்துரைத்தார். முஸ்லிம் என்ஜினியர்கள் உத்தியோக உயர்வுக்கு நீர்ப்பாசன டிரக்டர் சிபார்சு செய்தும் விவசாய நிர்வாகக் கமிட்டி அவர்கள் போதுமான கல்வியுடனில்லையென்று சிபார்சு நிராகரிக்கப் பட்டதாகத் திரு. ஜாயா கேட்டதற்கு விவசாய மந்திரி தெரிவித்தார். நீர்ப்பாசனப் பகுதியில் ஓர் வெட்டுப் பிரேரணை நிறைவேறியது. பின்னர் மாலை 6 மணிக்குச் சபை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கூடுவதாகப் பின்போடப் பட்டது.

நள்ளிரவில் அக்கிரமம்

அரசாங்கசபைச் சேவகன் வீட்டில் கொள்ளை அமளி

கோட்டில் மூர்ச்சித்த மாது

கம்பஹா செப் 10—

அரசாங்கசபையிற் சேவகனுகவிருக்கும் ஒருவன் வீட்டில் செப்டம்பர் 7 ம் தேதி இரவு ஓர் கொள்ளைக் கோஷ்டியினர் புகுந்து புரிந்த அக்கிரமங்களையும் கொடுமைகளையும் கேதறுப் பொலிஸ் கோட்டில் எடுத்துக் கூறிய அந்தச் சேவகனின் மனைவி கோட்டில் மூர்ச்சித்து விழுந்தாள். குரிப்பனுவாவைச் சேர்ந்த எச். ஏ. அல்பெனிஸ் ஜெயமன் சிங்கோ கே. ஈப்பன் ஈ. ஏ. தேமனிஸ் முதலியோரும் வேறு நாலைந்து பேரும் அரசாங்கசபையிற் சேவகனுக வேலை பார்க்கும் குரிப்பனுவா டி. கார்த்தலிஸ் அப்பு எனபவன்வீட்டிற்புகுந்து ஒரு பெரிய மரப் பெட்டியையும் இரு இரும்புப் பெட்டிகளையும் மற்றெரு மரப்பெட்டியையும் உடைத்து 408 ரூபாய் பெறுமதியான பணம் நகை துணிமணிகள் முதலியவற்றைக் கொள்ளையிட்டு அபிசினுஹாமி என்னும் மாதுக்கும் அவனுடைய இரு புத்திரிகளாகிய சேவகனின் மனைவி பூஜினுவுக்கும் ராங்கோ நோனுவுக்கும் காயமேற்படுத்திய தாகவும் மூன்று எதிரிகளும் ராங்கோ நோனுவைத் தாக்க முயன்றதாகவும் கம்பஹாப் பொலிஸ் கோட்டில் கடவத்தைப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் குற்றஞ் சாட்டினர். 4 வது எதிரி கைதியாகக் கோட்டிற் கொண்டுபோய் நிறுத்தப் பட்டான். முதல் மூன்று எதிரிகளும் தலைமறைவாய் இருக்கின்றனர்.

தவறணைச் சிப்பந்திக்கு விடுதலை

பணமோசடி வழக்கில் நிதிபதியின் தீர்ப்பு

[நமது நிருபர்]

யாழ்ப்பாணம், செப். 8வ

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓர் சாராயத்தவறணையில் கணக்கப்பிள்ளை வேலை பார்த்துவந்த வண்ணர் பண்ணை வாசியாகிய வேலுப்பிள்ளை சோமசுந்தரம் என்பவர்மீது, கச்சேரியில் சேர்ப்பதற்காக, பெரியசாமி என்பவர் கொடுத்த ரூபா 1010 ம் வழியில் தவறிவிட்டதாகக் கூறி, அப்பணத்தை மோசடி செய்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு இன்று யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் முடிவுற்றது.

எதிரி நகரசபைக்கு பெருந்த பணத்தொகை கொடுக்கவேண்டியிருந்ததால், பணக்கஷ்டத்திற் குட்பட்டிருந்ததாகவும், எனவே அவரிடங் கொடுக்கப்பட்ட பணம் தவறிவிட்டதாகப் பொய்சொல்லி அவர் மோசடி செய்துவிட்டதாகவும் வழக்காளி தரப்பிற் கூறப்பட்டது.

கச்சேரிச் சேவகரான வல்லிபுரம் சரவணையென்பவர் சம்பவம் நடந்த அன்று எதிரி கச்சேரியி னருகில் நின்றுகொண்டு ரூபா 1010ஐ தவற விட்டுவிட்டதாகக் கூறி அழுது கொண்டிருந்ததாகச் சாட்சியங் கூறினர்.

கச்சேரி, மதுபரிபாலனக்கிளாக் தமது சாட்சியத்தில், சம்பவம் நடந்தவன்று எதிரி முதலில் 2000ரூபாகொண்டு வந்து சேர்த்ததாகவும், இன்னும் குத்தகைப் பணத்தையும் பின்னல் கொண்டுவருவதாகச் சொல்லிப் போனபிறகு, மாலை ஏறக்குறைய 3 மணிக்குத்திரும்பிவந்து ரூபா 1010ஐ தவற விட்டுவிட்டதாகக் கூறிக் கலங்கியதாகவும், எதிரி பல தடவைகளிலும் பெருந்த பணத்தொகைகளைக் கோட்டில் கொண்டுவந்து சேர்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

முடிவில் நீதிபதி எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளிக்கையில் ஒரு சமையம் எதிரி கூறுவது கட்டுக்கதையா யிருக்கலாமென்றும், ஆனல் அவ்வாறு கூற்றுப் பொய்யென நிருபிக்கப்படவில்லை யென்றும் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டையிற் சண்டை

(நமது நிருபர்)

வட்டுக்கோட்டைப் பாதிரியார் கோயிலடியில் வசிக்கும் எஸ். கனகசபை என்பவருடைய காரின் கூடாரத்தை அவ்வூர் இராமலிங்க மென்பவர் ஒரு கத்தியால்வெட்டியபோது எழுந்த வாக்குவாதங் காரணமாக இராமலிங்கம் என்பவர் கனகசபைக்கும் வேலுப்பிள்ளைக்கும் காயம் வருவித்ததாகவும் சிகிச்சைக்காக அவர்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப் பட்டதாகவும் அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும்அறிகிறேம்.

ஒரே சூலில் மூன்று குழந்தைகள்

இங்கிரியா ஆஸ்பத்திரியிற் பிரசவம்

ஹொரண, செப். 7வ

இங்கிரியா ஆஸ்பத்திரியில் அல்லகாவா என்னும் கிராமத்திலிருந்து வந்த மாது மூன்று ஆண்குழந்தைகளைப் பிரசவித்த செய்தியைக் கேள்வியுற்று அங்கு ஏராளமான ஜனங்கள் விஜயஞ்செய்தனர். அக்குழந்தைகள் 3½, 2½, 2 ருத்தல் நிறையையுடையன. நல்ல சுகத்தோடிருக்கின்றன. ஆஸ்பத்திரி அதிகாரிகள் குழந்தைகளை நன்குகப் பராமரிப்பதாக வாக்களித்தும் ஜியார் ஜியானு சில நாட்களில் தனது கிராமத்திற்குச் சென்றுவிட்டாள்.

விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 48/P-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1937-ம் ஆண்டு ஐப்பசிமாசம் 16-ந்வ சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் அக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

புலோலிகிழக்கு 1. பசுபதி கனகசபையும், 2. பெண் பாறுபதிப் பிள்ளையும் வழக்காளிகள்.

புலோலி கிழக்கு பாவிலுப்பிள்ளை சக்கிரியாஸ் தனக்காகவும் தனது காலஞ் சென்ற பெண் சவீனம்மாவின் ஆதனத்தின் தத்துவகாரனாகவும் எதிராளி.

ஆதனம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமாராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று பருத்தித்துறை வென்றிபாததேவன் குறிச்சியிறை சல்லி மணல் நிலப் பரப்பு 32 குளி 1⅞ இதில் 6 பரப்பு 4⅜ குளியில் வடக்குப்புறமாக ⅜ க்குரிய பங்கு 4 பரப்பு 11/12 குளி. கல்வீடு கிணறு தென்னைகள் பனைகள் வேப்புகளும் எல்லை கிழக்கு நீக்கிலான் சகாயனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு நாகலிங்க முதலியார் வல்லிபுரத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு றேட்டு. தெற்கு சக்கிரியாசின் பெண் காலஞ்சென்ற சவினம்மாவுக்குரியவாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவை முழுதும். Regd. A [illegible]

C. MANICAVASAGAR,
Commissioner.

Puloly South,
10th Sept. 1937.
(Mis. 118. 13-9-37.)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் திரிகோணமலை 8-ம் நெம்பர் காசுக்கடைவீதி வெள்ளிவேலு கனகசபை கனகசபை சிவப்பிரகாசபிள்ளை & கனகசபை தியாகராஜா என்பவர்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படிசட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

நம்	உ	ரூ.	ச.	நகைகளின் விபரம்.
1935-ம் ஆ 5-ம் மீ				
10879	1	10	00	இ கல் காதோலை சோடி 1
10889	1	6	14	கின்னட்டியல் கின்ணு 9
10916	2	25	00	பொன்தாலிகொடி 1
10944	3	10	00	பேலீடு சோடி 1
10958	3	25	24	ஒப்பின் காப்பு 1
10985	4	53	00	குண்டுச் சங்கிலி 1
11028	5	30	04	மோதிரம் 1 கொப்புச்சிமிக்கி சோடி 1 சிறுதிருகு பூ 1
11100	7	6	04	மோதிரம் 1
11133	8	20	00	குடம் இரண்டுடன் சந்திரகார சங்கிலி 1
11258	12	12	00	இ கல் பதக்கம் 1
11364	14	200	00	முடிச்சுக் குத்திக் கொடி 1 பி இ
11448	16	31	00	தங்கக்காப்பு 1 கனு குத்து16 அரசிலை5இ
11475	16	7	00	கைவிலக்கு 1
11644	21	10	04	இ கல் கவுத்தோர் 1
11654	22	6	04	சிமிக்கிசோடி1 மு வி
11655	22	30	00	உடை பூசாந்திரக் கொடியுடன் குடம் 4
11719	24	15	00	பத சவுக்கமணி ஒன்றுக்கு மணி 22
11727	24	20	00	இ கல் காதோலை சோடி 1
12011	31	100	00	பொற்கடையம்சோடி1
1935-ம் ஆ 6-ம் மீ				
12086	2	16	16	மைவிரல் கவுத்தோர் 1
12097	3	15	04	மோதிரம் 1
12143	4	10	00	இ கல் கடுக்கன் சோடி 1 ச இ
12198	5	10	00	வெ கல் கலாவரைக் குச்சு சோடி 1
12227	5	25	00	அரைப்பவுன் இரண்டுடன் பதபிறை திருக்கொன்றைமணி 1 க்கு மணி 41
12313	9	480	00	½ பிறுங்ஸ் நாணயம் 70கொண்ட மாலை 1
12319	9	13	00	முத்துக் காதோலை சோடி 1
12375	10	5	50	கொப்புச் சிமிக்கி சோடி 1
12427	11	6	50	கல்மோதிரம் 1
12474	12	14	00	ஒற்றைக்கல் தோடு சோடி 1
12491	12	8	04	தாலி 1 கொப்புச் சிமிக்கி சோடி 1
12547	14	810	00	மணிகோர்வை ஒன்றுக்கு மணி 31, 5 பிறுங்ஸ் நாணயம்44 கொண்டமாலை 1, கலாவரை மோதிரம் 2, மோதிரம்2, தங்க அடுக்குக்காப்பு சோடி 1, குண்டுச்சங்கிலி 1, கு வை 20 டலர், வெ கொடியிற் கோர்த்தது வாக்கூடு 9, பொன் தாலிக்கொடி1
12575	15	60	04	செடிக்காப்பு சோ 1
12609	15	92	00	மாலைப்பதக்கம்1, சிறு மோதிரம் 2, இ கல் புரோச் 1, புலிநக புரோச் 1
12668	17	9	00	இ கல் மோதிரம் 1
12922	24	20	04	இ கல் பதக்கம் 1
12961	24	10	00	சிறு கூடு 1
12977	25	8	00	இருசயம் 1
12998	25	7	04	சிறுமோதிரம் 1
13020	26	9	00	ஒட்டியூட்டுவலையல்2
13057	26	10	00	இ கல் பெண்குச்சு சோடி 1
13081	27	50	04	சம்புராதவளையல் 2
13082	27	30	04	சிறு கெட்டிக் கொலுசுக்காப்புசோடி1 மு இ
13084	27	8	04	முறியல்சவடி முகப்புடன் மணி 9
13145	29	25	00	செடிக்காப்பு 1
13146	29	20	00	சுற்றிருகுபூ 1, இ கல் காதோலை சோ1
1935-ம் ஆ 7-ம் மீ				
13233	1	12	00	சவுக்கமணி 1 க்கு மணி 22
13234	1	8	00	பொன்தோடு சோ1
13292	1	12	00	சவடிமுகப்பு 1
13304	2	12	50	திருகு பூ 1
133-2	2	13	00	மோதிரம் 1
13491	7	10	00	ஒரு கற் செருகு தோடு சோடி 1
13704	12	8	00	இ கல் பதக்கம் 1
13752	13	10	00	இ கல் காதோலை சோடி 1
13771	13	12	00	இ கல் வண்ணாத்திப் பூச்சி பென்டன் 1
13822	14	7	00	சிறு ஒரு கற்செருகு தோடு சோடி 1
13859	15	12	00	சிகப்புக் கற் காதோலை சோடி 1
13939	17	115	04	டி கம்பிப்பூரானட்டியல், டைமன் காப்பு சோடி 1
14020	20	15	00	மோதிரம் 1
14100	22	8	00	கல்மோதிரம் 1
14195	24	225	00	கு வை வேலை செய்த பவுன் 1ம் கு வை அரைப்பவுன் 10 முடன் இலைச்சங்கிலி 1, செ வே 20 டலருடன் குண்டுச் சங்கிலி 1
14196	24	115	00	சவடியுடன் கொடி 1 கு வைஅரைபவுன்6

விற்பனவு ஈசுர ஞு புரட்டாதி மீ 13-ந் திகதிக்குச் சரியான 1937-ம் ஆ செப்டம்பர் மீ 29-ந் திகதி புதன்கிழமை காலை 8 மணிதொடக்கம் எடுபட்டநகை பிறகெலாத மிகுதி மேற்படி கடையிற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வெத்தீஸ்மேன்தர்
க. பாலசுப்பிரமணியம்
6-ம் நெம்பர்
திரிகோணமலை

திரிகோணமலை
9—9—37
Mis 115. 13 & 6-9-37

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: ஈசுர வரு
ஆவணிமீ உகூ திங்கட்கிழமை

இங்குள்ள சங்கம் சபைகள் நடக்கும் முறைகள்

தமிழ்மக்களுக்கு மந்திரசபை நிர்வாகசபை கல்வி விருத்திச் சங்கம் நீதி சொல்லுஞ் சபை முதலிய இவைகள் புதியனவல்ல. மந்திர சபைகளெனப்படும் ஆலோசனைச் சபைகளைப் பற்றிக் கந்தபுராணம் இராமாயணம் பாரதம் முதலிய பழைய நூல்கள் விரிவாகக் கூறியுள்ளன. அரசியற் சபைகளின் முறைகளையிட்டு, மனுநூல் சங்க நூல்கள் திருக்குறள் முதலியன நன்கு எடுத்துக்காட்டியுள்ளன. கல்வி விருத்திச் சங்கம் மதுரைத் தமிழ்ச்சங்கவாயிலாக அறியக் கிடக்கின்றது. நீதி சொல்லுஞ் சபைகளைப்பற்றிப் பெரிய புராணம் திருவிளையாடற் புராணம் என்னுமிவைகள், திருநீலகண்ட நாயனர் வரலாற்றிலும் மாமனுக வந்து வழக்குரைத்த வரலாற்றிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. "பஞ்சாயத்து" என்னும் ஐந்து பேர் கூடிய சபை பரதகண்டத்தில் இக்காலத்திலும் உண்டு. மன்றோரஞ் சொல்வாரை ஔவைப்பிராட்டி கண்டித்திருத்தலும் நீதிசபையின் மகத்துவத்தை யெடுத்துக் காட்டும். இக்காலத்தில் இல்லாதொழிந்த நூல் அரங்கேற்றும் சபை அக்காலத்தில் உன்னதமான நிலைமையில் விளங்கியது. இப்படி யெல்லாமிருத்தலினற்றான் சபை சங்கங்களை நிர்வகித்து நடத்துதல் தமிழ் மக்கட்குப் புதியதன்றென்கின்றேம். ஆனற் காலத்திற்குத்தக இக்காலத்திற் சபை முறைகள் சிறிது மாற்றப்பட்டிருத்தல் கூடும். இப்புதிய திருத்தங்களையோ மாறுதல்களையோ இங்கே வருவித்தவர்கள் எங்களையாளும் பிருத்தானியரென்பதை மறுக்க முடியாது.

பிருத்தானியர் நடத்தும் அரசியல் விவகாரச் சபைகளும் சங்கங்களும் மிகவும் உந்நதமான விரும்பத்தகுந்த முறையிலே நடைபெற, அவைகளைப் பின்பற்றி இங்கு நடத்தப்படுவனவாகிய அரசாங்கசபை தொடக்கம் மாணவர் கல்வித்தேர்ச்சிச் சங்கங்கள் ஈருகவுள்ள எல்லாச் சபைகளுஞ் சங்கங்களுங் கூட்டங்களும் இன்னபிறவும் பல வகையில் முறைதிறம்பிப் பொறாமை குரோதம் வன்சொல் சுயநலம் முதலிய தீமைகளுடன் செறிந்து நடைபெறுகின்றன என்று சொல்லுதல் மிகையாகாது. இப்படி நடக்கத் தலைப்பட்டமையினலே இக்கூட்டங்கள் செய்யத் தலையிட்ட நன்னோக்கங்களும் நன்முயற்சிகளும் சிற்சில சமையங்களில் இடையூறடைய, பகை பழி ஐக்கியக் குறைவு வேற்றுமை யென்னுமிவைகளே முளைத்து வளர்வதும் உண்டு. சில தினங்கட்கு முன்னர் கொழும்பில் நடைபெற்றதாகிய ஒரு கூட்டத்திலே ஸேர். துரைசுவாமியவர்களும் இங்கே நடைபெறுங் கூட்டங்களில் இக்காலத்தில் பெருஞ் சில கெடுதிகளையும் அக்கிரமங்களையும் எடுத்துக் கண்டித்திருக்கின்றார். ஸேர். துரைசுவாமியவர்கள் சொன்னதென்ன?

"நான் இங்கிலாந்திற்குப் போய் நின்ற காலத்தில் அங்கே என்மனத்தைக் கவர்ந்தவை அங்குள்ள உந்நதமான மாட மாளிகை கூட கோபுரங்களல்ல, அங்கு நடைபெற்ற அரச சக்கரவர்த்தியின் பட்டாபிஷேகக் கடங்குகளல்ல; பராக்கிரமத்தோடு கூடிய பிருத்தானிய தரைப்படை கடற்படைகளல்ல, வேறு எவையுமல்ல; பின் எவையென்னில் ஆங்கில மக்கள் பாராட்டுந் தொன்மை, சாதிக்குரிய கௌரவம், பெருந்தன்மையான நடை, சபை சங்கங்களை நடத்தும் மேலான முறை, தத்தம் கடமையிற் கண்ணுங் கருத்துமாயிருத்தல், கருமமாற்றுந் திறமை, அபிமானமென்னு மிவைகளே யாகும்; அவர்களுடைய மேலான செயல்களையுங் குணங்களையும் நான் மறத்தல் முடியாது. இலங்கையிலுள்ள நாங்கள் ஏன் அவைகளைப் பின்பற்றி நடக்கவொண்ணுதென்பதே என்னுடைய ஆசங்கை. நாங்களும் எங்களுடைய முதாதையர்களைப் பின்பற்றி எங்கள் பழைய மேலான ஒழுக்கங்களைக் கைக்கொண்டு நடந்து ஒரு பெரிய ஒற்றுமையுள்ள சாதியாக வர முயலுதல் வேண்டும். ஆங்கில நாட்டிலே பேச்சுச்சுவாதீனம் அதிகம் உண்டு; ஆனலும் அவர்கள் ஒருபோதும் எடுத்த கருமத்திற்குத் தீமை விளையக்கூடியதாகப் பேசமாட்டார்கள்; ஒருவரை யொருவர் அந்தரங்க விஷயமாகத் தாக்கி ஏதுங் கூற மாட்டார்கள்; ஒருவர் மனதைப் புண்படுத்த மாட்டார்கள்; ஆனல் எங்கள் அரசாங்க சபையில் மேலே சொல்லப்பட்டவைகட்கு நேர் விரோதமான செயல்களும் பேச்சுக்களும் உண்டு; இந்த விஷயத்திலே நாங்கள் அவர்களைத்தான் பின்பற்றுதல் வேண்டும். எங்கள் நாட்டினரை நன்னிலைக்குக் கொண்டுவரும் விஷயத்தில் சிறியார் பெரியார் என்ற பேதம் பாராட்டாது ஒத்துழைத்தல் ஆவசியகம்; ஒரு யந்திரத்திலே ஒரு சிறிய ஆணி நிலை குலையுமானல், ஓடியுமானல் முழு யந்திரமும் நாசமடைதல் கூடுமல்லவா"

ஸேர். துரைசுவாமியவர்கள் சொன்னவை அத்தனையும் நிசமாகும். இவைகள் மாத்திரமல்லாமல் இக்காலத்தில் நடைபெறுஞ் சங்கங்கள் சபைகள் பல, சுயநலம் தற்புகழ் முதலிய தீய எண்ணங்களைக் கொண்ட அங்கத்தவர்களின் சேர்க்கையால், தாம் தாம் செய்ய எடுத்துக்கொண்ட நற்கருமங்களைச்செய்ய முடியாது இடர்ப்படுகின்றன. சபை சங்கங்களிற் பல விபரீத கொள்கைகள் செயல்கள் கொண்ட அங்கத்தவர்களும் இக்காலத்திற் சேர்ந்திருக்கின்றார்கள், தாம் சொல்வதையே மற்றவர்கள் செய்யவேண்டும், தாம் நினைப்பது போலவே ஏனைய அங்கத்தவர்களும் நினைத்தல்வேண்டும், நாம் எடுத்தாள நினைத்த கருமத்திற்கு நிர்ணயத்திற்கு விரோதமாக நிற்கும் அங்கத்தவரெவரும் தமக்குச் சன்ம சத்துருக்கள், அவர்கட்குச் சமையம் வாய்த்தாற் கேடுசூழல் வேண்டுமென்ற இப்படியான தீய நோக்கங்கொண்டவர்களும் பொதுச் சங்கங்கள் சபைகளில் இடையிடையே இருப்பார்களானல் இங்குள்ள சங்கஞ் சபைகள் நன்மையின் பொருட்டு ஒத்துழைப்பதெப்படி?

சங்கம் சபைகளில் விவாதிக்கப்படும் விஷயம் செய்யப்படுங் கருமம், சரியோ, பிழையோ, தமக்கு அநுகூலமானதோ, பிரதிகூலமானதோ, அவைகளையும், பேசிய செய்த அவர்களையும் அந்தக் கூட்டம் முடியவே தாமும் மறந்து விடுதல் வேண்டும். சபையின் அகத்தே செய்யப்படுங் கருமங்களைப் புறத்தே பேசுவதும் சாதிப்பதும் சபை ஒழுங்குகளுக்கு நேர்விரோதமானவைகளாகுமல்லவா? மேலும் சங்கத்தில் முகமன் பாராட்டி நடப்பவர்கள், பயந்து பிழைக்கு உடன்படுபவர்கள், தம்மனச்சான்றினைக்கொன்று கருமம் ஆற்றுவோர், சங்கத்தின் நோக்கத்தை மறந்தவர்கள் முதலிய இவர்கள் அங்கத்தவராதற்கு அருகரல்லர். இப்படியான குறைவுகளையும் தவறுகளையும் அறவேயகற்றி இங்குள்ள சங்கஞ் சபைகள் நடைபெறுமானல் நாட்டிற்கு நன்மையுண்டு, எடுத்த எக்கருமமும் கைகூடும், நாமும் ஒரு வல்லமையுள்ள சாதியாராக உலகத்திலே நிலவுதலாகும்.

*

அரசாங்கசபை வேடிக்கை

சென்ற வியாழக்கிழமை பிற்பகல் 2-30 மணியளவிற் கூடிய அரசாங்க சபைக் கூட்டத்தில் ஒரு கூட்டம் கூடுவதற்கு வேண்டிய மிகக்குறைந்த தொகையினர் தாமும் அங்கு சமுகமளிக்காமையினற் கூட்டம் 10 நிமிஷங்களுக்குப் பின்போடப்படலாயிற்று. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மூவரும் புற நீங்கலாக, அரசாங்கசபையில் 58 அங்கத்தவர்கள் இருக்கின்றனர். இவர்களில் ஒரு கூட்டத்தைக் கூட்டுதற்குக் குறைந்தது 20 அங்கத்தவர்களேனும் வேண்டுமென்பது அரசியற் சட்டமாகும். இத்தொகையினர்தாமும் அன்றுபிற்பகல் 2-30 மணிக்குக் கூடிய அரசாங்கசபைக்குச் சமுகமளிக்கத் தவறினரென்றால் நமது அரசாங்கசபை அங்கத்தவர்களின் பொறுப்புணர்ச்சி எவ்வாறிருக்கின்றது என்பதை நாம் நன்கு ஊகித்துக் கொள்ளலாம். நமது மந்திரிமார்களின் சம்பளமென்ன? மாதம் ஒன்றுக்கு 1500 ரூ அங்கத்தவர்களின் சம்பளமென்ன? மாதமொன்றுக்கு ரூபா 500. இத்தகைய பெருந்தொகைப் படிச்செலவுகளைப் பெற்றுவரும் எமது அரசாங்க சபை அங்கத்தவர்கள் தாம் ஏன் அரசாங்கசபைக்குச் சென்றார்கள்? யார் அவர்களை அங்கு அனுப்பினர்கள்? அங்கு அவர்கள் செய்யவேண்டிய கடமைகள் யாவை? என்றிவற்றைச் சிறிதும் உணர்ந்து நடப்பதாகத் தெரியவில்லை. தமது பொறுப்பு அவர்களுக்கு அற்பமும் தெரிவதாகக் காணப்படவில்லை. ஆகப் பதினேழு பேர் மாத்திரமே அன்று அந்த நேரத்தில் அச்சபையில் இருந்தார்களாம். அவர்களுள்ளும் இருவர் மாத்திரமே மந்திரிமார்கள் என்றும், ஏனைய மந்திரிமார்கள் அங்கு காணப்படவில்லையென்றுந் தெரிகிறது. இந்நிலைமையிற் கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் என் செய்வார்? அவர் ஐந்து நிமிஷங்களுக்குத் தமது இருக்கையில் உட்கார்ந்திருந்தார். அவரது கண்கள் யாராவது இன்னுஞ் சிலர் வருவார்களோவென்று பார்த்துக்கொண்டே இருந்தனவாம். எவ்வளவு நேரம் ஒருவர் தலைவருக்குரிய ஸ்தானத்திலிருந்துகொண்டு ஒரு வேலையுஞ் செய்யமுடியாமல், அணிலேறவிட்ட குக்கல் போல அங்கத்தவர்களைப் பார்த்துக்கொண்டிருத்தல் கூடும். ஆகவே, அவரும் பொறுமையை இழந்து கூட்டத்தைப் பத்து நிமிஷங்களுக்குப் பின்போட நேரிட்டது. இதிலிருந்து நமது மந்திரிமார்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் தமது கடமையில் எத்தகைய சிரத்தை இருக்கின்றது என்பது நன்கு புலப்படுகின்றதல்லவா?

சபையில் நடைபெறவேண்டிய விஷயமோ வரவு செலவுத் திட்டம் பற்றிய விஷயக்; அது பொது மக்களுக்கு எவ்வளவு முக்கியமான விஷயம் என்பது நாம் இங்கு கூறவேண்டுவதில்லை. நமது நாட்டின் எதிர்காலம் அதிலேயே தங்கியிருக்கின்றது. சனங்களைப் பாதிக்கும் ஒரு விஷயத்திற் சனங்களால் தமது பிரதி நிதிகள் என்று தெரிந்தனுப்பப்பட்ட இந்த அங்கத்தவர்களுக்கு எவ்வளவு சிரத்தை இருத்தல்வேண்டும். வரவு செலவுத் திட்டத்திலுள்ள சில மான்யங்களில் அதிருப்தியேற்படுமேல், அவற்றில் ஏதாவது திருத்தப்பட வேண்டுமேல், மேற்படி திட்டம் திருத்தக் கோம்மிற்றியின் விவாதத்திலிருக்கும்போதே அதனைச் செய்து கொள்ள முடியும். அதுவே தக்க சமயம். கோம்மிற்றி விவாதம் முடிந்தபின் அதனைச் செய்துகொள்ளுதல் சாலாது. இத்தகைய அரியநேரத்தில் நமது அரசாங்கசபை அங்கத்தவர்களுக்கு அவசிய வேலைகள் வந்து சேர்ந்து விடுகின்றன. இந்தியாவிலோ அங்குள்ள மந்திரிமார்கள் 500 ரூபா வேதனத்தோடும் அங்கத்தவர்கள் 75 ரூபா வேதனத்தோடும் எவ்வளவு உற்சாகத்தோடு உழைத்து வருகின்றார்கள் என்பதை இவர்கள் அறியார்களா? கொழுத்த படிச் செலவுகளைப் பெறுவதிற் கண்ணுங் கருத்துமாயிருக்கும் இவர்கள் தமது கடமைகளைச் சரிவரச் செய்வதில் மாத்திரம் "தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டம்' என்ற விதமாக நடந்துகொள்ளுகிறார்கள். அடுத்த தேர்தல் வரும்போது இவர்கள் பொது ஜனங்கள் முன் நின்று தம்மைப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யும்படி பல்லிளிக்கும்போது யாராவது இவர்களுடைய இச்செயலை ஞாபகப்படுத்தின் இவர்கள் என்ன சொல்வார்களோ?

தேகவியோகம்

K. நமசிவாயம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிற் பல வருடங்களாக உபாத்தியாயராகவிருந்த காரைநகர் க. நமசிவாயமவர்கள் தம்மைப் பீடித்த நோய் காரணமாக நேற்றுப் பிற்பகல் அங்குள்ள தமது இல்லத்திற்றனே, மனைவி மக்கள் கதற, சுற்றமித்திரர் மாணக்கர் புலம்பக், கேட்டாரேவருங் கவலைப்பட, அகாலமரணமடைந்தனரென்னுந் துக்கச் செய்தியை இன்று காலை கேள்விப்படலானேம். காரைநகரில் தக்க குலங்குடியைச் சேர்ந்தவராகிய இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மேல்வகுப்பிற் கல்வி பயின்று, இவரிடத்துள்ள திறமை காரணமாக அக்கல்லூரியிற்றனே ஆசிரியராகவும் நியமனம் பெற்றுக் கல்விபயிற்றி வந்தனர். இவருடைய சைவாசாரம் ஒழுக்க முதலியவைகளைக் கண்ட மேற்படி கல்லூரி அதிகாரசபையார் இவரை விடுதிச்சாலைப் பரிபாலகராகவும் நியமிக்கப் பல வருடங்களாக அக்கடமையையும் மிக்க திறமையோடு நடத்தி வந்தனர். இவை காரணமாக அக்கல்லூரியிலுள்ள ஆசிரியர்கள் மாணக்கர்கள் முதலிய எல்லாரும் இவர்மீது விசேஷ அன்புபாராட்டி வந்தனர். இவருடைய மரணம் மிகவுஞ் சடுதியானதெனலாம். வயசு 35 வரையிலிருக்கும். திரு. நமசிவாயமவர்களின் பிரிவையிட்டு அவரையறிந்தவரெவரும் அநுதாபப்படுகின்றனர். இவ்வாசிரியரின் இழவின் பொருட்டுத் துக்கத்திற்கு அறிகுறியாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விடுதலை செய்யப்பட்டது; இன்று நடைபெறுவதாகிய ஈமக்கடன்களிற் சமுகமாயிருக்க விரும்பி இக்கல்லூரியின் ஆசிரியர் மாணக்கர் பன்னூற்றுக்கணக்கானேர் காரைநகருக்குச் சென்றுள்ளனர்.

வீட்டோடு கைக்குழந்தை வெந்தது

மன்னரில் நடந்த கோரச் சம்பவம்

மன்னர் செப் 0—

நேற்றைய தினம் மீனட்சி என்னும் ஓர் மாது தன் குழந்தையை அடுப்புப் பக்கமிருந்த ஓர் மரக்கட்டிலில் வைத்து விட்டுக் கடைச்சாமான் வாங்கச்சென்று விட்டாள். அடுப்பில் ஓர் பானையில் அரிசி வெந்துகொண்டிருந்தது. அதை அந்த மாதின் 4 வயதான பானிமேல் என்னும் மகன் பார்த்துக் கொண்டிருந்தான். அடுப்புத் திடீரென்று தீவிரமாக எரிந்து விட்டதால் தீப்பற்றியது. காலில் நெருப்புக் காயமடைந்த பானிமேல் கைக் குழந்தையைக் காப்பாற்ற உதவி தேடி வெளியே ஓடினன். அடுத்த வீட்டிலிருந்த ஒரு பெண் கைக் குழந்தையைக் காப்பாற்ற முயன்றாள். ஆனல் நெருப்பின் வேகத்தால் காப்பாற்ற முடியவில்லை. அந்தக் குழந்தையுடன் வீடு முழுவதும் சில நிமிடங்களில் எரிந்துபோய் விட்டது.

தலைமைக்காரர் 2 மணி நேரத்திற்குப் பின் அவ்விடம் வந்து மரண விசாரணை நடத்தினர்கள்.

பாரதி தினக் கொண்டாட்டம்

—:o:—

இந்துக் கல்லூரியிற் படத்திறப்பு

சென்ற சனிக்கிழமையன்று காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில், வரகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களின் தினம் கல்லூரி இந்து வாலிப சங்கத்தாரால் மிக்க விமரிசையாகக் கொண்டாடப்பெற்றது. மண்டபம் அழகாக அலங்கரிக்கப்பெற்றிருந்தது. கல்லூரி ஆசிரியருள் ஒருவராகிய பிரமஸ்ரீ N. நாராயணசாஸ்திரியார் B. A. B. L. அவர்கள் தலைமை வகித்தார்கள். ஒரு மாணவனுற் பாரதியார் பாடிய முருகன் பாட்டுப் படிக்கப் பெற்றது. அதன்பின், தலைவரவர்களால் சுப்பிரமணிய பாரதியார் அவர்களின் உருவப்படம் திறந்து வைக்கப்பட்டது. இப்படத்தைத் திறந்து வைக்கும்போது தலைவரவர்கள் பாரதியாரின் பெருமையைச் சுருக்கமாகவும் அழகாகவும் எடுத்துக் கூறினர். இப்படம் கல்லூரி மாணவருள் ஒருவராகிய சிவசுப்பிரமணிய ஐயரால் அழகுற வரையப்பெற்றிருத்தல் குறிப்பிடத் தக்கது. அதன்பின் கல்லூரி மாணவர்களுள் ஒருவராகிய திரு. V. A. விசுவலிங்கம் என்பவரால் பாரதியாரின் வாழ்க்கை வரலாறு நன்கு எடுத்துக் கூறப்பட்டது. அதன்பின் திரு. G. இராஜகோபால் அவர்களால் பாரதியாரின் பாடல்களிற் சில மிக்க உற்சாகமாகப் பாடப்பட்டன.

அதன்பின் சொற்பொழிவு நிகழ்த்திய இந்துசாதன உதவிப் பத்திராசிரியர் திரு. க. கி. நடராஜன் அவர்களால் பாரதியாரின் கவித்திறமையும், இளமை தொட்டே அவரிடங் காணப்பட்ட தேசபக்தியும், அவர் பாடலில் ஆங்காங்கு காணப்படும் வீரம், சோகம், நகைச்சுவை முதலிய ரசங்களும், அவர் தம் பாடல்களில் நிறைந்துள்ள சொன்னயம் பொருணயங்களும், உவமை நயங்களும், அவரது கற்பனசக்தியும், வேதாந்தபாடல்களின் மாண்பும், அவரது வசன நடையின் எளிமையும் அழகும், மொழிபெயர்ப்புத் திறனும், மாற்றுரை வாய்மூடச் செய்யும் ஆற்றலும், அவரது சர்வசமய சமரஸக் கொள்கையும், தமிழ் மொழிப்பற்றும், பல அயன்மொழி அறிவும், அவரது பாடல்களிலிருந்தே அறியத்தகுந்த வாழ்க்கைக் குறிப்புக்களும், வீரர் புகழ்பாடுந் திறமையும், அச்சமின்மையும், தியாககுணமும், இன்னபிறவும் அழகாக எடுத்துரைக்கப்பட்டன. அதன்பின், பாரதியார் அவர்களின் பாடல்களைக் கல்லூரி மாணவர்கள் பக்கவாத்திய சகிதமாகப் பாடினர்.

ஈற்றில், சங்கக் காரியதரிசியாற் சொற்பொழிவாளர்களுக்கும் பிறர்க்கும் நன்றி கூறப்பட ஏறக்குறைய 12-30 மணியளவிற் கூட்டம் இனிது நிறைவேறியது.

கூட்டத்திற்குப் பெருந்தொகையான மாணவர்களும் ஆசிரியரிற் சிலரும், கல்லூரி நிர்வாகசபை அங்கத்தவர்களிற் பலரும், வேறுபலரும் சமுகமளித்திருந்தார்கள்.

கதவுநிலைக் களவு

எதிரிக்கு ஒரு வருஷமும் இண்டு வருஷப் பொலிஸ் காவலும்

(நமது நிருபர்)

சுண்டிக்குளியில் வசிக்கும் கே. சின்னத்துரை யென்னும் ஓர் இந்தியன் அவ்வூர்ச் சுவாம்பிள்ளை வசமுள்ள கதவுநிலையைக் களவாக எடுத்துச் சென்றதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு டிஸ்திறிக் கோட் நீதிபதி திரு. C. குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டான். எதிரி முன்னும் இது போன்ற மூன்று குற்றச்சாட்டுகளிலும் வேறு குற்றச்சாட்டில் ஒருதரமுமாகத் தண்டிக்கப் பட்டிருந்தார். நீதிபதி எதிரிக்கு ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனையும் இரண்டு வருஷப் பொலிஸ் காவலுமெனத் தண்டனை விதித்தார்.

கோவ சந்தன சோப்

அழகான
மாதர்களுக்கேற்றது,
சருமத்திற்கு
அழகையும்
ஆரோக்கியத்தையும்
அளிக்கவல்லது



எல்லா
இடங்களிலும்
கிடைக்கும்

ஏஜன்ட்ஸ்:—

தேவார் அன்கோ,
57 மெயின் ஸ்ட்ரீட்,
கொழும்பு.

யாழ்ப்பாணத்தில் இது பெறக்கூடிய இடங்கள்
N. M. S. சுல்தான் மோகிதீன் பிரதர்ஸ், பேரியகடை, யாழ்ப்பாணம்
மெடிக்கல்ஹால், பேரியகடை, யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம்அப்போதிக்கரிஸ்கம்பனிமெயின்ஸ்ட்ரீட்,யாழ்ப்பாணம்
(Mis. 156 10-9-37—தி.

வேலை செய்யும் திறத்தையோ
நீடித்த பாவிப்பையோ
விலையையோ
எதை நீங்கள் பாத்தாலும்



மொரிஸ்—கம்மர்ஷல்
டிரக்ஸ்
உங்கள் பணத்தைப் போட்டுவைப்பதற்குத்
தகுந்ததாகும்.
வேண்டுவோர் எழுதி விபரம் அறிந்துகொள்ளலாம்.
சோல் ஏஜன்ட்

உவாக்கர் லன்ஸ் அன்கோ, லிமிற்றட்
கொழும்பு.

யாழ்ப்பாணத்திற்கும்,
திருக்கோணமலை, முல்லைத்தீவு, புத்தளம், மன்னார், அநுராதபுரம் ஆகிய இடங்களுக்கும் சோல் ஏஜெண்ட்ஸ்

வி. செல்வத்துரை & சன்ஸ்
அதிகாரம் பெற்ற ஏஜன்ஸ்
ஆஸ்பத்திரி ரோட்டு, யாழ்ப்பாணம்.

Y.17 19.8.37.— 18-8-38. (தி)

புதுமணத் தம்பதிகளிடம் களவு

பிரயாணிகள் விடுதியில் நடந்த சம்பவம்

மாத்தறை, செப், 6வ

அக்குரெஸ்ப் பிரயாணிகள் விடுதியிற் தங்கியிருந்த புதுமண இன்பம் துலங்கும் மணமக்களிருவருடைய இருமப்புப்பெட்டியிலிருந்து சில துணிகளும் சாமான்களும் திருடப்பட்டன.

கொழும்பு மத்திய தந்திக் கந்தோரைச் சேர்ந்த திரு. ஜே. எ. பூஞ்சி ஹேவாவும் அவரது மனைவியும் புதுமண இன்பத்தநிற்காகப் பிரயாணிகள் விடுதிக்குச் சென்றனர். சமீபயில் அவர்களுடைய இருமப்புப் பெட்டி உடைக்கப்பட்டு அதிலிருந்த மொத்தம் 272 ரூபா பெறுமதியுள்ள துணிகளும் சாமான்களும் திருடப்பட்டனவாம்.

அந்த விடுதியிற் காவலாளியாக வேலைபார்க்கும் எச் ஏ. பெண்டில் என்பவன்மீதும் கே. கே. இரத்னயகா என்பவன்மீதும் மாத்தறைப் பொலிஸ்கோட்டில் இதசம்பந்தமாக வழக்குத் தொடரப்பட்டது.

முதலாம் எதிரி, எச். ஐ. பெரேணண்டோ என்பவரிடம் 3 சேலைகளைக் கொண்டுபோய்க் கொடுத்து 5 ரூபா பெற்றதாகவும், மிகுதிப் பணத்தைப் பெறுவதற்குப் பின்னர் வருவதாகக் கூறிச் சென்றவன் திரும்பி வராததால் அவருக்குச் சந்தேகமுண்டானதாகவும், மேற்படி பிரயாணிகள் விடுதித் திருட்டுச் செய்தியைக் கேள்வியுற்றதும், அவர் பொலிஸாருக்கு அறிவித்தனாகவும், அதன்பின் ஒரு மூங்கிற்புகரில் ஒரு சாக்குப்பையில் களவுபோன மற்றச் சாமான்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் சாட்சியத்திற் கூறப்பட்டது. எதிரிகள் குற்றவாளிகள் அல்லரெனக் கூறினர். வழக்கு விசாரணை தவணையிடப்பட்டது.

அறிவித்தல்

செ. சிவகடாட்சுந்து அன் சன்,
மருத்துச்சரக்கு வியாபாரம்
பெரியகடைத்தெரு யாழ்ப்பாணம்.

கினை ஸ்தாபனம்:
சட்டநாதர் கோவிலடி
நல்லூர்-வடக்கு யாழ்ப்பாணம்.

இத்தால் சகல வைத்தியர்களும் மருத்துக்கடை வியாபாரிகளும் அறியவேண்டியது மேற்கூறும் மருத்துக் கண்டகளில் மானேசராயிருந்த ஆ. இரசையா என்பவர் ஒருவித அறிவித்தலுமின்றி 23-8-37 தொடக்கம் குறித்த கடைகளுக்கு வராமல் கின்றவிடபடியாலும், இதையிட்டு பலவிதமான பிணக்குகள் இருக்கிறபடியாலும் தயவுசெய்து குறித்த விளாசக் கடைகளில் பற்றுவரவுள்ளவர்கள் இனிமேல் மிஷ்டர் இரசையாவிடம் இக் கடைகள் சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்கள் செய்யாது கேர்மமாய் வந்து பற்று வரவு செய்து போகுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
செ. அபிராமிப்பிள்ளை.

(Mis114. 9 & 13-9-37.)

கல்முனையின் கண்கொளாக் காட்சி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செயல் பக்கிரத்தைநோடு இவ்விரு தலங்களிலும் கதிர்காமத்திலும் அற்புதமான முறையிற் செய்யப்படும். விசேஷ உற்சவ காலங்களில் அன்னதானமும் கடைபெறும். இவைகளோப்பார்க்க இலங்கையின் பல்வேறு பாகங்களிலிருந்தும் மக்கள் செல்வர். நாய்ப்பட்டிமுனை யென்னுமிடத்தில் முற்காலத்தில் ஒருவர் நாய்கள் பட்டியாக வளர்த்தாரென ஓர் ஐதீக முளது.

இப்படியாக நாம் கல்முனையின் இயற்கைவனப்பி லீடுபட்டிருந்தகாலை நாட்களுக்குள் மழை அதிகம் பொழிந்ததடியால் மட்டக்களப்பு வாவி பெருகி வீதியை ஒரு அடி உயரத்திற்கு மேலாக மேலிப் பாய்ந்தது. இங்கேயில் நாம் மோட்டார்வண்டி மூலம் மட்டக்களப்புச் செல்ல முடியாதிருந்ததால் படகுவண்டிமூலம் பிரயாணஞ்செய்ய நேர்ந்தது. ஆகவே நாம் மட்டக்களப்பைப் பாராது வீடு செல்லவேண்டியதாயிற்று.

சைவ பரிபாலன சபை

1930ஆ நிகழ்த்தவை

(30-8-37ன் தொடர்)

As an instance he told them of how boys wasted their time and money by going night after night to witness Cinema shows, wasted their health and the money of their parents by smoking cigarettes and thus contracted bad habits which later on they found difficult to break. He vividly pictured to them the sight he had seen in big cities like Colombo, of persons "flattening their noses glasses of shop windows" and then walking in and buying things for which they had no real need. He warned the boys against being lured by these temptations. He enjoined them not to give away to desire because there was no limit to desires. He asked them to be contented with what they had. He advised them to steer clear of the five great sins. பஞ்சமாபாதகம். He enjoined them not to smoke and poison their system. He quoted extensively from Thayumanavar and Manickavasagar and said in support of his contention that "God is in us". He stressed the importance of temple worship and asked them to pray for siddha suddhi (சித்த சுத்தி) and samaddhava Buddhi (சமத்துவ புத்தி). He concluded by saying that he had come there that evening to tell them (boys) all that. He advised them to worship God and to live with contentment, and first to last with love of God. He resumed his seat with the words ~~Shukam~~, Shukam.

Mr. R. SivaGurnNather, Proctor, proposed a hearty vote of thanks to Sir and Lady Ramanathan. He also thanked the audience and said that it was their duty to help their College as they had done in the past".

Some select scenes from Macbeth were then presented by the boys. This was followed by a *Kalakshepam* on saint Nandan by a junior boy of the College. This item was excellently done, and was very much appreciated by the audience

With the singing of Thevaram, the function came to a close at 8 p. m.

J. H. C. O. B. A.

The Jaffna Hindu College Old Boys' Day was celebrated on Saturday, the 29th March 1930 A full day's programme was gone through. In the morning there was a tennis tournament in which the college teachers and some old boys took part. In the evening there were games and disguise competitions. Light refreshments were served after music.

The Annual General Meeting of the Old Boys' Association was held at 6-30 p. m. Mr. V. R. Venkataraman, Principal, presided. After the adoption of the Secretary's report, the house proceeded to elect office-bearers for the next year.

Vice-Presidents: Dr. S. Thambipillai, Dr. S. Thuraiyappan and R. SivaGuauNather.

Secretary: Mr. T. Muthusampipillai, Advocate.

Assistant Secretary: Mr. S. Patanjali, Proctor.

Treasurer: Mr. C. Sabaratnam. B. Sc.

Besides, a Committee consisting of twelve members was elected.

PRIZES FOR SPORTS

Mr. C. Ariyanayagam, Proctor then gave away the prizes for sports.

On being asked to speak a few words, Mr. Ariyanayagam said that when he was asked to give away the prizes, he consented to do so on the condition that he should not be asked to speak. Anyhow he should not set a bad example by disobeying the orders of the Principal. He was sorry to find that no prizes were awarded for football and cricket. A cricket or football match between the old boys and the present boys should have been played and prizes given on its results. The speaker then went on to deal with the merits of football and cricket which encouraged team work In a democratic age when views of the majority should be acted upon, it was but proper that ideas of democracy should be inculcated in the youth. it was training in youth that went to make one's character.

The speaker then addressing the old boys said that they must make greater sacrifices and put their hands deep into their pockets to help their *alma mater*. He then referred to Societies in Europe and said that as they (Ceylonese) were now copying many things from the West, they should take care to imbibe the spirit behind those movements, He thanked them for the opportunity they had given him to speak.

Mr. K. V. Rasiah proposed a vote of thanks to Mr. Ariyanayagam which was carried with acclamation.

Mr. V. Ramalingam proposed a vote of thanks to the President.

The meeting terminated with the singing of *Thevaram*."

Cambridge Results

The following are the successful candidates from the Jaffna Hindu College in the Cambridge Local Examination held in December, 1929.

SENIOR

V. Alagaratnam (Honours), P. Kandiah, K. Karthigesu, C. Ramanather (Honours), S. Saravanamuttu (Honours), V. Thambyaiya (Honours), A. Navasivayampillai, V. Rasanayakam, S. Kandiah, R. Pushparathinam, K. Sellathurai, A. Shanmukam, K. Thampipillai, V. Thiagarajah, E. Thiruneelakandam, A. Vaitilingam, V. Vinacitamby, K. Vaitialingam.

JUNIOR

K S. Sithamparam, S. Jayaveerasingham (Honours), S. Saravanamuttu, S. Senathirajah, T. Sanmugalingam. A. Chakasothy, P. Eliathamby, A. Kandiah, M. Kumarya, A. Manikkam, A. M. Mohamado, S. Murugesu, V. Murugiah, C. C. Nadarajah, K. Nakalingam, S. Panchacharam, K. Ponnambalam, N. Ramanathan, C. Rasaretnam, A. Sangarapillai, A. Sinniah, R. Sivagnanampillai, C. Somaskantar, K. Thiruganasampanthapillai, S. Thiruvilangam, V. Vaithialingam, S. Vaithialingam, C. Valauthapillai, S. Vallipuranather, C. Veerasingham, R. Vettiveluppillai and A. Vythilingam.

—(தொடரும்)

Nethrananda Thailava

Ceylon's Premier Curative Medicine Oil

நேத்திரானந்த தைலம்

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவே முதல்தரம்

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50
தபாற் கூலி 45 சதம்

இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஜந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதை படர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி, தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையுங் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணுடிபோடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயதுவித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகிய பெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள். வெளிவந்திருக்கும் ஏனைய போலித் தைலங்களைப் போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்து கோள்வதும், மாதர் அதிகமாகவிரும்புவதும் 35 வருடங்களாக எவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்,

இந்த நேத்திரானந்த தைலமே

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்டபெயர் உண்டு என்று வளர்ந்த கிரிகிற ஒவ்வொரு சிறு பிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலைமயக்கம், கண் எரிவு, தலைவலி, இளநரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதஞ் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினுல் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்திற் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல. இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப் பட்டுள்ளது.

ஓர் உலக அதிசயம்

1937 ம் ஆண்டு ஜூன் மீ 4 ந் திகதி எழுதிய கடிதத்தில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. T. C. செல்லையாபிள்ளை பின்வருமாறு எழுதகின்ருர்:— "உங்கள் நேத்திரானந்த தைலம் அற்புதமான பலனைத் தருகின்றது. தற்போது விலைப்படுந் தைலங்கள் எல்லாவற்றுள்ளும் இதுவே சிறந்ததென்பது அங்கீகரிக்கப்பட்டதொன்று" 12-6-37 இல் சுன்னாகத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகசுவாமி பின்வருமாறு எழுதியுள்ளார்:- "உலகப் பிரசித்தி பெற்ற உங்கள் நேத்திரானந்த தைலம் எனக்கு மிகப் பெரிய நன்மையைச் செய்திருக்கிறது" போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்றன்விலை ரூபா 2-50 வேத முதலியார் - பாணந்துறை

நேத்திரநோய்களுக் கிதினும்சிறந்தது வேறுகிடையாது

ஹேவியலாவிலுள்ள மன்ஸ்லண்ட் தோட்டச் சுப்பிரிண்டெண்ட் மிஸ்ரர் G. ஹேர்பேட்ஸ் எழுதுவதாவது:- "நீண்டகாலமாக நான் உங்கள் உலகப் பிரசித்தி பெற்ற நேத்திரானந்த தைலத்தை உபயோகித்தேன். தலைக்கு அது மிகச் சிறந்த எண்ணெயாகும். உங்கள் தைலத்தால் நான் மிகப் பெரிய நன்மையை அடைந்துள்ளேன். போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்று ரூபா 2-50 வி. பி. மூலம் அனுப்புவதாயின் ரூபா. 2-95.

கண் தொந்தரவு நிர்க்கமாக மாறியது

மாத்தளை, 'அபயக்கோன் வளவை'ச் சேர்ந்த திரு. C. D. F. அபயக்கோன் பின்வருமாறு எழுதகின்ருர்:- அதிகமாக வாசித்ததால் எனக்கு ஏற்பட்டிருந்த கண்தொந்தரவை உங்கள் நேத்திரானந்த தைலம் நிர்க்கமாக மாற்றியது. நான் நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்ததைக் காட்டிலும் மிக அதிகமான பலனை அது அளித்தது." ஆறு அவுன்ஸ் நிறையுள்ள போத்தல் ஒன்றின் விலை ரூபா 2-50. W. டேனியல் பெர்னுண்டோ வைத்திய சேகர, வேத முதலியார், பாணந்துறை, B. T. S. தலைமைக்காரியாலயம், கொறிஸ் றேட், கொழும்பு; காஸில் ஹோற்றல், கண்டி.

நேத்திரானந்த தைலம்

இலங்கையின் முதலாவது நோய் தீர்க்கும் மருத்துவ எண்ணெய் பெண்களால்விரும்பிவாசிக்கப்படுவது ஆண்களால் நிச்சயமாகத் தேர்ந்தெடுபடுவது பரம்பரைத் தலையிடி நோய்க்கும் ஜலதோஷம் அல்லது கபத்துக்கும் பல்வேறு நேத்திர நோய்களுக்கும் விசேஷமானது.

கேளாமலிருக்கவே அனுப்பப்பெற்ற தராதரப் பத்திரங்கள்

திரு. P. S. இளையதம்பி, களுப்பஹாலி தோட்டம், எழுதுவதாவது:- "உங்கள் உலகப் பிரசித்தி பெற்ற நேத்திரானந்த தைலத்தின் பலன் மிகச் சிறந்தது என்று மிகச் சந்தோஷத்தோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்."

திரு. M. L. ஜயசிங்கி, எல்டெப் தோட்டம், எழுதுவதாவது:- மிக உக்கிரமான தலையிடி ஏற்பட்டபோது உங்கள் தைலத்தை உபயோகித்தேன். நான் அடைந்த அற்புதமான சுகத்திற்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். இதனை எனது நண்பரொருவர்க்கும் சிபார்சு செய்தேன். அவரது தலையிலும் கண்ணிலும் ஏற்பட்டிருந்த நோய்களை அது நீக்கிற்று."

திரு. K. A. D. அமரசேகரின், வடன் சொல்லுவதாவது:- "நான் 3 போத்தல்களை உபயோகித்தபின், நான் புத்தம் புதிய மனிதனைப் போலக் காணப்படுகின்றேன். இரவில் நல்ல நித்திரை வருகின்றது. தேகத்தைப் பொதுவாக நன்கு தயாரிக்கின்றது. ஆயின் இதை உபயோகிப்பதற்கு முன்னரோ அதிகாலை 2 அல்லது மூன்று மணிக்குமுன் நான் நித்திரை பெறவதே அற்பலமாயிருந்தது."

திரு. P. E. பெர்ஞண்டோ, வியக்கவெலாத் தோட்டம்:- "தலை, நாசி, காது சம்பந்தமான சகல நோய்களுக்கும் இது மிகச் சிறந்த தைலமாகும்"

திரு. எம். ஏ. செல்லையா, ஆசிரியர் மானிப்பாய்:- "தலை கண் சம்பந்தமான சகல நோய்களுக்கும் இது தக்க பலனை யளிக்க நான் கண்டேன்."

மிஸ். B பர்ச், பொலிஸ் பங்களோ, வரக்கப் பொலா:- "உங்கள் எண்ணெய் ஒரு பெரியவரமாகும். அது இல்லாமல் இருக்க முடியாது." போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்று ரூபா. 2-50 W. டேனியல் பெர்ஞண்டோ வைத்தியசேகர, வேதமுதலியார் பாணந்துறை,பெளத்தமந்திரய,கொறிஸ்றேட்,கொழும்பு; காஸில்ஹோற்றல்,கண்டி.

நேத்திரானந்த தைலத்தின் மூலம் தமது வேலையைக் காப்பாற்றிக் கொண்ட கனவான்

சிங்கப்பூரிலிருந்து அனுப்பப்பெற்ற தராதரப் பத்திரம்

1937 ம் ஆண்டு ஜூன் மீ 18 ந் உ, பினங்கில் நடைபெறும் "மலாயாட் சிபிஜனல்" என்னும் பத்திரிகையில் ஆசிரியர் குழாத்தில் ஒருவராகக் கடமை பார்க்கும் திரு. T. கோப் எழுதுவதாவது:- சமீபத்தில் இலங்கையிலுள்ள எனது நண்பரொருவர் உங்கள் நேத்திரானந்த தைலத்தில் ஒரு போத்தலை எனக்கு அனுப்பினேன். சில காலமாக நான் கண்ணிலுள்ள நோயினுல் நான் பெரிதும் வருந்தினேன். இதனுல் எனது பத்திரிகை வேலையை விட்டுவிடும்படி கூறிச் சில கண் வைத்திய நிபுணர்கள் தெரிவித்தார்கள் ...... உங்கள் முதற் போத்தலே எனக்கு நன்மை விளைத்திருக்கின்றது என்பதில் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதில் இன்னுஞ் சில போத்தல்கள் வேண்டும்......தயவு செய்து C. O. D. போஸ்ற்மூலம் இன்னும் இரண்டு போத்தல்கள் அனுப்பி வையுங்கள்." வேண்டியோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதவும்:- வேத முதலியார் W. டேனியல் பெர்ஞண்டோ வைத்திய சேகரா. "ஸ்ரீவெதவளவு" பாணந்துறை, கொறிஸ்றேட், புறக்கோட்டை

தலைமை ஸ்தானம்:
வைத்தியசேகா முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்ஞண்டோ,
ஸ்ரீ வேதவளவும், பாணந்துறை.

கிளை ஸ்தானம்:
பௌத்த மந்திர வைத்தியசாலை
கொறிஸ் றேட், கொழும்பு-இலங்கை
காஸில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:- வேதமுதலியார், பாணந்துறை

Y 70.1-7-7-37 to 30-6-38

பழனியாண்டவர்க்கு அர்ச்சனைக் கட்டளை

கலியுக வரதராகிய பழனியாண்டவனுடைய பூரண அநுக்கிரகத்தைப்பெற்று வாழவிரும்பும் அடியார்கள் தங்கள் தங்கள் ஜன்ம நட்சத்திரதினத்தில் பெருமானுர்க்கு அர்ச்சனை செய்வித்து விபூதிப் பிரசாதத்தை அன்புடன் பெற்றுக்கொள்வார்களாக.

ஒரு முறை விசேஷமாக உங்கள் நாம நட்சத்திரத்தில் அர்ச்சனை ஆராதனை செய்து விபூதிப் பிரசாதம் அனுப்ப ரூபா-2-00 அப்படியே வருடம் 12 மாசங்களிலுஞ் செய்தற்கு ரூபா- 6-75.

பணம் அனுப்பும்போது உங்கள் நாம நட்சத்திரங்களையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி எமக்கு அனுப்புக.

P. நடராஜபண்டாரம்,
மலைக்கோயில், அயன்மிராஸ்,
பழனி S. I.

(Q71. 1-7-37 to 30-9-37) (தி)

அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு

வட இலங்கை உணவுப் பொருள் விருத்திச் சங்கம்

வடமாகாணத்தில் ஐந்து ஏக்கருக்குக் குறையாத நிலமுடைய கமக்காரர் இச் சங்கத்தில் அங்கத்தவராய்ச் சேர்ந்து கொள்ளவும்.

வருட சந்தா ரூபாய் 2. பழைய அங்கத்தவர் தம்மால் வருமதிச் சந்தாவை அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். எல்லா அங்கத்தவரும் தமது சந்தாவை இச்சங்கத் தனதிகாரி வ. சோமசுந்தரத்துக்கு திருநெல்வேலி ஒற்றுமை நிதி என்ற விலாசமிட்டு அனுப்பவும். அங்கத்தவர் இச் சங்கச் சேவையால் இலாபமடையலாம்.

சி. சுப்பிரமணியம்
அக்கிராசனர்,

ஒக்ரான், யாழ்ப்பாணம், 2-7-37.
(Q. 72. 6-7 to 5-10-37)

சாலாமிஸ்திரி லேகியம்

:o:

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிருர்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதானு, சாலாமுஸ்லி,சப்பேமுத்ஸிலி பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை நாகப்பூ, லங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயக்காந்தசெந்தூரம், சாம்பிராணிப தங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் நீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற் சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் ருதுகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவுபிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனுல் முன் மனி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை.
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகதார வைத்தியசாலை.
வீட்டு இலக்கம் 33
பழைய வாடி றோட்டு
கோட்டமுனை
மட்டக்களப்பு, சிலோன்

(Y 64. 1-1-37 to 31-12-37.)

N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo

Telephone No. 30.

(Y 65 1-3-37—31-3-38) தி

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டூர்ந்தானிடை

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134,367 00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12, மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும். **உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக் கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறுங் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம். காணி ஈடாக வைத்துக் கொண்டு பிணையுடன் கடன் எடுக்கலாம். (இந்தக்கடனையும்) பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்து கொள்ளலாம்.

சி. செல்லப்பா
மானேஜர்.

Y 225. 21-11-36—20-11-37 (தி)

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற்
புறத்தாற்றிற் போஒய்ப்பெறுவதெவன்

வீ. பீ. நிக்கலஸ் அன் சன்ஸ்

என்றழைக்கப்பட்ட

மலாயா வங்கி லிமிற்றட்

(தொடுவாய் நாட்டிற் பதிவு செய்யப்பெற்றது)

அனுமதிபெற்றமுதல்:-$20,00,000-00 கட்டப்பட்டமுதல்:-$2,60,200-00
தலைமை ஆபீஸ்:- 2 வொச் அவெனியு, கோலாலம்பூர்

கிளை, எஜென்சி ஸ்தாபனங்கள். { யாழ்ப்பாணம், கொளும்பு, மதாாஸ், சிள்ளான், சேறம்பான், ஈப்போ.

இவ் வங்கியின் யாழ்ப்பாண ஆபீசில் சகலவித வங்கி முயற்சிகள், பணமாற்றல் 8 வீத வட்டிக்கு நகை இடுபிடித்தல், பினங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்கட்குக் கப்பற்றுண்டு பெற்றுக்கொடுத்தல், உலகத்திலுள்ள பிரதான பட்டினங்களுக்குப் பணமனுப்புவதற்குத்தகுந்த வசதிகள் முதலியன செய்யப்படும்.

எஸ். பீ. யோசேப்,
மனேஜர், யாழ்ப்பாணம்.

வீ. பீ. நிக்கலஸ்,
மனேஜிங் டிறக்ரர்.

(Y 54. 22-6-37—21-6-38) (தி)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residinag at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakas Press, Vannarponnai, Jaffna on Monday, September 13th 1937